# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 14 வெள்ளிக்கிழமை (28-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:122


யாழ் நகரில் மாநகரசபைக்குச் சொந்தமான காணியில்

# முகாம் அமைப்பதை தடுக்கக்கோரி மனுத்தாக்கல் செய்வதற்கு முயற்சி

## பொது அமைப்புகள் ஆலோசனை

யாழ்ப்பாணம்,மார்ச்28

**யாழ்.நகரின் மத்தியில் பழைய மாநகரசபை அலுவலகம் அமைந்திருந்த நிலப்பகுதியை உள்ளடக்கி பெரும் பிரதேசத்தில் படைத்தளம் ஒன்றை நிறுவப் படையினர் மேற்கொண்டுவரும் முயற்சியை தடுப்பதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுக்கப் பொதுஅமைப்புகள் ஆலோசித்து வருகின்றன.**

**படைத்தளம் நிறுவும் பூர்வாங்க வேலைகளை இடைநிறுத்தக்கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.**


பழைய மாநகரசபைக் காணியை உள்ளடக்கி படைத்தளத்தை நிறுவும் இடத்தை படையினர் புல்டோசர்கள் மூலம் துப்புரவுசெய்து வருகின்றனர்.

அந்தப் பிரதேசத்தை அடையாளப் படுத்துவதற்கான தற்காலிக வேலியும் நேற்றுமுதல் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் மாநகரசபையின் நகர மண்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)






யாழ்நகரின் மத்தியில் புதிய படைத்தளம் நிறுவுவதற்காக படையினர் கையகப்படுத்தியுள்ள நிலப்பகுதியையே படங்களில் காண்கிறீர்கள். பழைய மாநகரசபை அலுவலகத்தை அண்டியுள்ள இந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் பிரவேசிக்கத் தடைசெய்யும் உத்தரவுப்பலகை அங்கு நடப்பட்டிருக்கின்றது.

நாரந்தனைத் தாக்குதல் வழக்கு

## மூன்று நிபந்தனைகளுடன் நெப்போலியனுக்கு பிணை

யாழ்ப்பாணம்,மார்ச்28

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பிரசாரப் பணிக்காகத் தீவகம் நோக்கிச் சென்ற தமிழக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நாரந்தனையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் தேடப்பட்டுவந்த முதலாவது எதிரியான ஈ.பி.டி.பியின் இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியன், நேற்று யாழ்.நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

மூன்று நிபந்தனைகளின் கீழ் அவரைப் பிணையில் செல்ல யாழ்.நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த வழக்கு யாழ்நீதவான் ஆர்ரி. விக்னராஜா முன்னிலையில் நேற்றுக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு கட்டங்களாக பாடசாலை தவணை விடுமுறை

கொழும்பு,மார்ச்28

அரசாங்கப் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை விடுமுறையை இரண்டு கட்டங்களாக வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை நிலையங்களாகச் செயற்படாத பாடசாலைகளுக்கு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதியும், பரீட்சை நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகளுக்கு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி

(14 ஆம் பக்கம் பார்க்க)

# நிமலராஜன் படுகொலை வழக்கில் நெப்போலியனை கைதுசெய்ய உத்தரவு

யாழ்ப்பாணம்,மார்ச்28

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பான சந்தேக நபர்களில் ஒருவரான ஈ.பி.டி.பி. அமைப்பின் இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியன் (செபஸ்ரியன் றமேஸ்) என்பவரை கைதுசெய்து மன்றில் ஆஜர் செய்யுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி ரஞ்சித் டி. சில்வாவுக்கு யாழ்நீதிமன்ற நீதிவான் ஆர்ரி.விக்னராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக நெப்போலியன் மற்றும் மைக்கல் கொலின் ஆகிய இருவரிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தது என்றும் - எனினும் அவர்கள் இருவரும் இக்கொலையுடன் தமக்குத் தொடர்பில்லை யென்று தம்மிடம் தெரிவித்ததாகவும் குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி ரஞ்சித் டி. சில்வா முன்னர் நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

ஒரு கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்து, சட்டமா அதிபரின் பணிப்புரையில் விடுவிக்கமுடியும் என்றும்-

சந்தேகநபர் ஒருவரை வழக்கில் இருந்து விடுவிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை என்றும்-

இருவரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும் என்றும் -

நீதிவான் அப்போது தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டசமயம் இறந்தவரின் நலனைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி ரெமீடியஸ், நீதிவானின் மேற்கண்ட உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

நெப்போலியன், கொலின் ஆகிய இருவரில் கொலின் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே, ஏற்கனவே நீதிமன்றம் விடுத்த கட்டளைப்படி நெப்போலியனை அடுத்த தவணைக்கு முன் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும் என்று நீதிவான், ரஞ்சித் டி.சில்வாவுக்கு உத்தரவிட்டார்.

இந்தக் கட்டளையை நடைமுறைப்படுத்தாமைக்கான காரணத்தை விளக்கி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் ரஞ்சித் டி.சில்வா

(14 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்நகரின் மத்தியில்

## முகாம் அமையவுள்ள இடத்தில் மக்கள் பிரவேசிக்கத் தடை!

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்மாநகரசபை வளாகம் மற்றும் வாடிவீடு அமைந்துள்ள பிரதேசங்களை உள்ளடக்கியதாக இராணுவமுகாம் அமைப்பதற்கு முன்னோடியாக அப்பிரதேசத்தை தற்காலிக கம்பிநூல்வேலி மூலம் படையினர் நேற்று அடையாளப் படுத்தி உள்ளனர்.

கண்டி வீதியில் வாடிவீட்டுச் சந்தியில் இருந்து துரையப்பா ஸ்ரேடியத்துக்கு பின்புறமாகவுள்ள காவலரண்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ரெலோ கூட்டமைப்பிலேயே போட்டி

வவுனியா,மார்ச்28

எதிர்வரும் வடக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழர் கூட்டமைப்பின் ஊடாகவே எதிர்கொள்ளவிருப்பதாக ரெலோ இயக்கத் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமாக அவரிடம் வினவியபோது, கூட்டமைப்பையே தாம் விரும்புவதாகவும் அதன் மூலமே அதிகளவான ஆசனங்களைப் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனித்துப் போட்டியிடும் பட்சத்தில் வாக்குகள் சிதறும் என்பதைக் கருத்திற் கொண்டே தாம் இந்த முடிவினை மேற்கொண்டதாகவும் இதில் மாற்றம் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர் கூட்டமைப்பின் கூட்டம் விரைவில் கூடும் எனவும் அப்போது நல்ல முடிவு எடுக்கப்படும் எனவும் சொன்னார்.(ஜ-3)

வடக்கு ஈராக்கில் புதிய போர்முனை

பக்தாத்,மார்ச்28

ஈராக்கின் தென்பகுதியில் கடும் எதிர்ப்புக்களைச் சந்தித்துவரும் அமெரிக்கா, ஈராக்கின் வடபகுதியில் தனது துருப்புக்களை வான் வழியாகத் தரையிறக்கி அங்கு புதிய போர் முனை ஒன்றைத் திறந்துள்ளது.

சுமார் 1000 அமெரிக்க பரா துருப்பினர் வடக்கு ஈராக்கில் குர்டிஷ் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லையில் இருக்கும் மலைப் பிரதேசம் மீது இறக்கப்பட்டிருக்கின்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சைக் களியாட்டம் என்று ஜனாதிபதி லண்டனில் கிண்டல்

சமாதானப் பேச்சுக்களை நாட்டுக்கு நாடு செல்லும் கார்னிவல் களியாட்டம் என்று லண்டனில் கிண்டல்செய்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

லண்டனில் உள்ள சுதந்திரக் கட்சிக் கிளைக்கூட்டம் லண்டன் 'மரியட்' ஹோட்டலில் நடைபெற்றபோது, அதில் ஜனாதிபதி உரை நிகழ்த்தினார்.

சமாதானப் பேச்சுகளில் என்ன நடக்கிறது என்று அமைச்சர்கள் பலருக்குக்கூடத் தெரியாது. பிரதமருக்கும் மிலிந்த மொறகொடவுக்கும் மட்டும்தான் தெரியும் என்று ஜனாதிபதி கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் போல நம்பிக்கைக்குச் சற்றும் பாத்திரமற்ற தலைவர் எவரையும் தாம் தனது வாழ்நாளில் கண்டதில்லை என்றும் ஜனாதிபதி சொன்னார்.(ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



மட்டு . அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் மாபெரும் உழவர்விழா அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டு., அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப்பொறுப்பாளர் நிசாம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் நிசாம் தலைமை உரையாற்றுவதையும், மட்டு., அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த.ரமேஸ் கொடியேற்றுவதையும், விவசாயி ஒருவர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## தெரிவுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்28

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்டக் கட்சிப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

தலைமைக் குழு உறுப்பினர்களான வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ரெலோ முதல்வர் எம்.ஸ்ரீக்காந்தா, ஹென்றி மகேந்திரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நோகராதலிங்கம், ரவிதிலகசூரிய மற்றும் உபதலைவர் எஸ்.இந்திரகுமார் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர் தெரிவுடன் மாவட்டப் பொதுச் செயலாளர் தெரிவும் இடம்பெறவிருப்பதாக ரெலோ பிரமுகர் எம்.கே.விந்தன் தெரிவித்தார். (ஐ-5)

# புலிகள் மட்டும்தான் ஏகப் பிரதிநிதிகள் என்றே கூட்டமைப்பு தேர்தலில் கூறியது

### ஆனந்தசங்கரியின் கூற்றுக்கு கிருஷ்ணபிள்ளை எம்.பி. பதில்

களுவாஞ்சிக்குடி,மார்ச்28

கடந்த தேர்தல் பிரசாரத்தில் விடுதலைப் புலிகள் மட்டும்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று தமிழ்க் கூட்டமைப்பு கூறியது என்பதே உண்மை என்று மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறி, தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு தமிழ்க் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கையில் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாதென கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி எம்.பி. இப்பொழுது கூறுவது சரியா என்று வினவியபோதே அவர் - இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல எந்தவொரு தமிழ் மகனும் நடந்துகொண்டிருக்கின்ற வரலாறு காணாத ஒற்றுமையை மேலும் வலுப்பெறச் செய்யவேண்டியது தலையாய கடமை. ஆகவே, தமிழினத்தின் ஒற்றுமையைப் பிளவுபடுத்துகின்ற வார்த்தைகளைப் பிரயோகிப்பது இந்தக் காலச் சூழ்நிலைக்குப் பொருந்தாது. தமிழ் மக்களாகிய நாங்கள் மேலும் ஒன்றுபடவேண்டிய வார்த்தைகளைப் பிரயோகிப்பதே சாலச் சிறந்தது என நான் கருதுகின்றேன் என்றார். (ஐ)

# அமெரிக்காவின் போரைக் கண்டித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு,மார்ச்28

ஈராக் மீதான அமெரிக்காவின் போரைக் கண்டித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் ஈராக்கிற்கு ஆதரவு தெரிவித்து துஆ பிரார்த்தனைகளும் நடைபெறவிருக்கின்றன.

கொழும்பிலுள்ள முஸ்லிம் அமைப்புகள் பலவற்றுடன் ஒன்று சேர்ந்து ஜே.வி.பி. இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்திருக்கிறது. ஜும்ஆ தொழுகையின் பின்னர் இப்பேரணி மாளிகாவத்தையிலிருந்து ஆரம்பமாகும். நகர மண்டபம் வரை பேரணி செல்லும் என அறியப்படுகிறது.

அமெரிக்கத் தூதுவரிடம் மகஜர் கையளிப்பதா என்பது குறித்து இன்று காலையே முடிவு செய்யப்படுமென ஜே.பி.வி. பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

மாளிகாவத்தை பீ.டி.சிறிசேன மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு துஆ பிரார்த்தனை நடைபெறும்.

உலாமா சபையும், மௌலவிமார் சம்மேளனமும் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளன. (ஐ)

## பொலீஸ் பொதுமக்கள் மோதல்

கொழும்பு, ஒறுகொடவத்த பகுதியில் நேற்று முற்பகல் பொலஸாருக்கு எதிராக பொதுமக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். டயர்களை வீதியில் எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதால் ஒறுகொடவத்த - கிராண்பாஸ் வீதி போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

சமகிபுர தொடர்மடி வீடொன்றில் 13 வயது சிறுமி ஒருவர் அடைத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்படுகிறார். என பொது மக்கள் கிராண்பாஸ் பொலீஸாரிடம் முறையிட்டிருக்கின்றனர். ஆயினும் இது தொடர்பாக பொலீஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## வேலணையில் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்28

தீவக மக்கள் நலன்காப்பகம் மற்றும் தீவக வளம்பேணும் அமைப்பு ஆகியன இன்று காலை 10.30 மணிக்கு வேலணை, வங்களாவடிச் சந்தியில் திறந்துவைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் இந்த அமைப்புகளுக்கான அலுவலகத் திறப்பு விழாவுடன் பெயர்ப்பலகைத் திரைநீக்கமும் இடம்பெறவுள்ளது. (ஐ-12)

## பாலர் கல்வி ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்28

பாலர் கல்விக்கழகத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 7 ஆவது செயலமர்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழகக் காரியாலயத்தில் பாலர் கல்விக்கழகத்தின் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் கியூடெக் நிறுவனத்தின் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி எமபத்மா கருத்துரை வழங்குவார். (ஐ-3)

## பண்ணிசை வகுப்பு நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்28

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரின் ஏற்பாட்டில், யாழ். சத்திரத்துச் சந்தி ஞான வைரவர் ஆலயம், சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் ஆகியவற்றில் இலவசமாக பண்ணிசை வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

வகுப்பு தொடர்பான ஆரம்ப வைபவம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சத்திரத்துச் சந்தி வைரவர் ஆலயத்திலும் அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு சுன்னாகம் சிவன் கோவிலிலும் நடைபெறும்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் வேண்டுகோளின் பேரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த வகுப்புகளை [illegible] கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் தலைமையேற்று நடததவுள்ளார். (எ)

# கொழும்பில் ஆசிய நாடுகளின் தொழில் அமைச்சர்கள் மாநாடு

### ஏப்ரல் முதலாம் திகதி பிரதமர் ஆரம்பித்து வைப்பார்

கொழும்பு,மார்ச்28

ஆசிய பிராந்திய நாடுகளின் தொழில் அமைச்சர்கள் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் முதலாம், இரண்டாம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், பூட்டான், பங்களாதேஷ், வியட்னாம், இந்தோனேசியா, நேபாளம், தாய்லாந்து ஆகிய நாடுகளின் தொழில் அமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

தொழில் அமைச்சர்களின் இந்த மாநாட்டில் சர்வதேச தொழிலாளர் சட்டம், ஜெனிவா உடன்படிக்கை, சிறுவர்களை வேலைக்கமர்த்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

தொழில், தொழில் வாய்ப்புகள அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் நடைபெறும் இப்பிராந்திய மாநாட்டைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பிரதாயப் பூர்வமாக ஆரம்பித்து வைப்பார். மாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

# கிளிநொச்சியில் நாளைமுதல் தகவல் தொழில்நுட்ப பட்டறை

யாழ்ப்பாணம்,மார்ச்28

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு ஏற்பாடு செய்துள்ள தகவல தொழில்நுட்பப் பயிற்சிப்பட்டறை நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் இந்தப் பயிற்சிப் பட்டறையின் முதலாம் நாளான சனிக்கிழமை "ஈழத்தமிழரும் தகவல் தொழில்நுட்பமும்" என்ற தலைப்பிலான ஆரம்ப விளக்கவுரையைத் தொடர்ந்து "இணையத் தள வடிவமைப்பு"என்ற தலைப்பிலும் -

இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை "மென்பொருள் வடிவமைப்பு - ஒரு நடைமுறை நோக்கு" என்ற தலைப்பிலும் பயிற்சிப்பட்டறை நடைபெறும். இலங்கையின் பிரபல்யமான மென்பொருள் வடிவமைப்பு நிறுவனத்தைச் சேர்ந்த செந்தூர்க்குமரன் புண்ணியமூர்த்தி பங்குபற்றுவார்.

வன்னி பெரு நிலப்பரப்பில் வசிக்கும் மாணவர்கள், இளைஞர்கள், உத்தியோகத்தர்கள் மத்தியில் தகவல் தொழில் நுட்ப ஆற்றலை விருத்தி செய்யும் நோக்குடன் இந்தப் பயிற்சிப் பட்டறை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என்று தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் மே மாதம் முதல் மூன்று கட்டங்களாக தகவல் தொழில்நுட்ப அறிவியலரங்குகள் கிளிநொச்சியில் நடத்தப்பட்டன என்றும்-

வன்னி புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் தகவல் தொழில்நுட்ப நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் - அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது(எ)

# அடையாள அட்டை வழங்க விசேட நடமாடும் சேவை

தேசிய அடையாளஅட்டை இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான விஷேட நடமாடும் சேவை ஒன்று யாழ்.செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வன்னிப்பகுதிகளில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்கள் மற்றும் அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் உடனடியாக அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன இப்பதிவுகள் பூர்த்தி செய்யப்பட்டபின்னர் விவரங்கள் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக, பிரதேச செயலர்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பின்னர் அவை அரச அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்நடமாடும் தேசிய அடையாள அட்டை வழங்கும் சேவை யாழ்மாவட்டம் முழுவதும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

# சம்மாந்துறை, கல்முனைக்குடியில் இன்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

நிந்தவூர்,மார்ச்28

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்துள்ளதைக் கண்டித்து இன்று அம்பாறை மாவட்டத்தில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. ஈராக் மக்களுக்காக விசேட துஆ பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன. இன்று ஜும்ஆ தொழுகையின் பின் சம்மாந்துறையிலும் கல்முனைக்குடியிலும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம் பெறவுள்ளன.

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையும், சமூக இயக்கங்களின் ஒன்றியமும் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயிலின் ஆலோசனையுடன் ஏற்பாடு செய்துள்ள அமெரிக்காவுக்கு எதிரான கண்டனப் பேரணியில் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்முனை சுன்னத்துவ்வல் ஜமாஅத் ஈராக் நட்புறவு ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள கண்டனப் பேரணியும், ஈராக் மக்களுக்கான துஆ, பிரார்த்தனையும் கல்முனைக்குடியில் நடைபெறவிருக்கின்றன.

"ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தையும் அகில உலக மக்களின் எதிர்ப்பையும் மதியாது உலக விழுங்கி "ஷைதானுல் அக்பர்" மிகப் பெரிய ஷைத்தான் அப்பாவி ஈராக் மக்கள் மீது தொடுத்து வரும் இந்த கொடூர யுத்தம் மனிதாபிமானமுள்ள சகலராலும் கண்டிக்கப்பட வேண்டும்" என்று சுன்னதுவ்வல் ஜமாஅத் ஈராக் நட்புறவு ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ)



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்திய நடனப் போட்டியில் முதல் இடம் பெற்ற உடுப்பிட்டி இளம் தளிர் பாடசாலை மாணவர் நடனக் குழுவினைப் படத்தில் காணலாம்.



அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அளவெட்டி மேற்கு கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர்தின விழாவின் போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அளவெட்டி அருணோதயக் கல்லூரி உப அதிபர் பத்மநாதனுக்கு மாலை அணிவிக்கப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கிராம அலுவலர் திருமதி மாலா மதிவதனன் மங்கள் விளக்கேற்றுவதையும் படத்தில் காணலாம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி சி.செல்வராணி, அளவையூர் சம்மேளனத் தலைவர் கமலநாதன் ஆகியோர் படத்தில் உள்ளனர்.



பக்தாத்தில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் சிக்கி பற்றி எரியும் கார் ஒன்றைத் தாண்டி ஈராக் மக்கள் பதறியடித்து ஓடுகின்றனர். மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதியில் இந்தக் குண்டுத தாக்குதல்கள் நடத்தப்பட்டன. குறைந்தது 15 இடங்கள் இந்தத் தாக்குதலில் தீ பற்றி எரிந்தன. ஈராக் சந்தை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பெரும் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.



விமானக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தைத் தூக்கிக்கொண்டு செல்லும் ஈராக்கியர்கள். புதன் அன்று நடந்த விமானக் குண்டுவீச்சில் இந்த அவலம் நேர்ந்தது. தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அமெரிக்காவின் ஏவுகணை மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் பொதுமக்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டு வருவதாக ஈராக்கிய அமைச்சர் கூறினார்.

# வட ஈராக்கில் அமெரிக்கப்படை வான் வழியாகத் தரையிறக்கம்

## புதிய போர் முனை திறக்கப்பட்டது

கட்டார்,மார்ச்28

**சுமார் 7 நாள்களாக ஈராக் தலைநகர் பக்தாத்தை நோக்கி தெற்கிலிருந்து முன்னேறி வந்த அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவில் முதற்றடவையாக ஈராக்கின் வடபகுதியில் விமானம் மூலம் தரையிறக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பக்தாத்துக்கு வடக்கேயும் அமெரிக்கா ஒரு போர் முனையைத் திறந்துள்ளது. தலைநகர் பக்தாத்தைக் கைப்பற்றுவதற்கான முற்றுகைக்கு உதவும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**பெரிய இராணுவ விமானங்களில் ஏ[illegible]றச் செல்லப்பட்ட அமெரிக்கப் படையினர் வடக்கு ஈராக்கில் குர்திஷ் [illegible] இனப்பிரிவினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பரசூட்கள் மூலம் தரை[illegible]யிறக்கப்பட்டார்கள். இதனால் 8 நாள்களாகத் தொடரும் ஈராக் யுத்த[illegible] புதிய பரிணாமத்தை அடைந்துள்ளது.**

தெற்கிலிருந்து மேற்கு நோக்கி நகர்ந்து, அங்கிருந்து பக்தாத் நோக்கி நகரும் படைகளும் தெற்கிலிருந்து பக்தாத் நோக்கி நகரும் படைகளும் அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்த்ததைப் போலன்றி ஈராக்கியப் படையினரிடம் இருந்து மிகக் கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்கின்றன. இந்த நிலையில், ஈராக்கின் வடமுனையில் அமெரிக்கா மற்றொரு போர்க்களத்தைத் திறந்துள்ளது. "இது வடமுனையில் இருந்து போருக்கான ஆயத்தம்" - என்றார் படைகளின் தரையிறக்கம் பற்றிக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராணுவ உயரதிகாரி ஒருவர்.

நேற்று நண்பகல் வரையில் சுமார் ஆயிரம் பரா துருப்பினர் தரையிறக்கப்பட்டனர். அவர்களுக்கு பக்கபலமாக மேலும் துருப்புக்கள் தரையிறக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு ஈராக்கில் உள்ள குர்திஷ் பகுதி சதாமுக்கு எதிரானவர்களின் பலமான கோட்டை என்பதால் அங்கு தமக்கு ஆதரவு இருக்கும் என்ற நோக்கில் அமெரிக்கா தன் படைகளை அங்கு தரையிறக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அப்பகுதியில் எதிர்ப்புக்கள் குறைவாக இருக்கும் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நம்புகின்றனர்.

### பக்தாத் மீது தொடர் தாக்குதல்

தலைநகர் பக்தாத் மீதான விமானத் தாக்குதல்களும் ஏவுகணைத் தாக்குதல்களும் தொடர்ந்தவண்ணம் உள்ளன. நேற்று வெள்ளிக்கிழமை 30இற்கும் மேற்பட்ட பெரும் வெடியோசைகளை பக்தாத்தில் கேட்டதாக அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

புதன்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 10இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈராக்கிய அதிகாரிகள் கூறினர்.

நேற்று மணற்புயல் சற்றுத் தணிந்திருந்தது. இதனால், நேற்றுமுன்தினம் இடைநிறுத்தப்பட்ட முன்னேற்ற நடவடிக்கையை கூட்டுப் படையினர் மீண்டும் ஆரம்பித்தனர்.

### தெற்கில் நிலை

தெற்கிலும் கடந்த இரு நாள்களாக இருந்து கடுமையான மணற்புயலின் பின்னர் தற்போது காலநிலையில் தெளிவு ஏற்பட்டுள்ளது. அப்படி நிகழ்ந்ததற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். "மணற்புயலின் ஆரம்பத்தில் நாம் ஏன் இந்தப் போரை ஆரம்பித்தோம் என்று நினைத்தேன்" - என்றார் பிரியன் கிரிஷ் என்ற அந்த அதிகாரி.

மணற் புயல் குன்றந்துள்ளதை அடுத்து கூட்டுப் படையினரின் மனோ நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### பக்தாத் நோக்கி முன்னேற்றம்

அமெரிக்காவின் பீரங்கிப் படையணி தனது 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட துருப்பினருடன் பக்தாத்தை நோக்கி முன்னேற முயற்சிக்கின்றது. பக்தாத்தில் இருந்து 70 மைல்களுக்குள் இருக்கும் ஓர் இடத்தில் இருந்து அமெரிக்கப் படைகளை எதிர்கொள்ளத் தாம் தயாராகி வருவதாக அப்படைப் பிரிவினர் தெரிவித்தனர். அதே சமயம், தெற்கே 30 மைல்களுக்கு அப்பால் இருக்கும் அபு சுக்காயார் என்ற இடத்தில் யூப்ரடீஸ் ஆற்றைக் கடக்கும் பாலத்தில் அமெரிக்கப் படைகள் மீது ஈராக்கியப்படைகள் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

## கைப்பற்றிய இடங்களில் உள்ள மக்களுக்கு உடன் உதவுங்கள்

### கோபிஅனான் அமெரிக்காவிடம் கோரிக்கை

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படைகள் இதுவரை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு ஐநா. பொதுச் செயலர் கோபி அனான் அமெரிக்காவிடம் கோரியுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் தன்னைச் சந்தித்துப் பேசிய அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீஸா ரைஸிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள பல இடங்களில் [illegible] மக்கள் குடி[illegible] [illegible]ணீர் போன்ற அத்தியாவசியத் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாமல் தவித்து வருவதைச் சுட்டிக்காட்டிய அனான், அவர்களுக்கு உடனடி உதவிகள் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

கூட்டுப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் ஏற்கனவே வந்துள்ள பகுதிகளில் தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெற்று வருவதால் அந்தப் பகுதிகளுக்கு ஐநா. பணியாளர்கள் சென்று சேவையாற்றுவது இயலாத காரியம் என்பதால், அவர்களுக்கான உதவிகளை அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் இராணுவமே மேற்கொள்ள வேண்டும் என்றார் அனான்.

போருக்குப் பின் ஈராக்கில் மேற்கொள்ளப்பட வேண்[illegible] [illegible]டிய மனிதாபிமான [illegible] பணிகள் பற்றி அனானுடன் ஆராய்வதற்காகவே கொண்டலீஸா ரைஸ் வந்ததாகவும், ஆனால், அனான அவரிடம் உடனடி மனிதாபிமான உதவிகள் பற்றியே வலியுறுத்தியதாகவும் ஐ.நா. பேச்சாளர் தெரிவித்தார்.

## ஈராக் படைக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி?

கட்டார்,மார்ச்28

அமெரிக்கா ஈராக் மீதான போரை ஆரம்பித்த பின்னர் அந்த நாட்டு இராணுவத்தை எதிர்த்து பொதுமக்கள் போராட ஆரம்பித்துள்ளதாக கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவில் ஈராக்கியப் படைகளுக்கும் கூட்டுப் படைகளுக்கும் இடையில் கடும் சண்டை நடந்து வருகின்றது. நகருக்குள் நுழைய முடியாமல் வெளியிலேயே நிற்கின்றன கூட்டுப் படைகள். இந்த நிலையில் அந்த நகரின் உள்ளே ஈராக்கியப் படையினருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துள்ளதாக கூட்டுப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

போர்க்களத்துக்குச் செல்ல விட்டால் உங்கள் குடும்பத்தினர் பழிவாங்கப்படுவார்கள் என்று ஈராக்கியப் படையினரை மிரட்டியே சதாமின் நிர்வாகம் இந்தப் போரைத் தொடர்ந்து வருவதாக பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஈராக்கிய அமைச்சர் முஹமது சயீத் அல்-சஹாப் மறுத்துள்ளார். ஈராக் மக்களின் மன உறுதியைக் குலைக்கும் நோக்குடன் அமெரிக்கா இத்தகைய கட்டுக் கதைகளை அவிழ்த்து விடுவதாக அவர் கூறினார். (ம)



கூட்டுப்படைகள் கைப்பற்றிய பஸ்ராவின் பகுதிகளில் ஈராக்கிய மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தில் அமெரிக்கப்படையினர் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு அமெரிக்க வாகனம் ஒன்றில் இருந்து வழங்கப்படும் குடி தண்ணீருக்கு முண்டியடிக்கும் ஈராக்கியர்கள்.

## போருக்கு எதிர்ப்புத் தெரிவித்த நோபல் பரிசாளர்களும் கைது!

நியூயோர்க்,மார்ச்28

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள போரைக் கண்டித்து வெள்ளை மாளிகையின் முன்பாக உள்ள பூங்காவில் ஆர்ப்பாட்டம் நடத்திய நோபல் பரிசு பெற்ற இருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

1976இல் சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்ற மெய்ரெட் கொறிகன் மகுறியும் 1997இல் நிலக்கண்ணி வெடிகளைத் தடைசெய்ய வேண்டும் என்பதற்காக உழைத்ததற்காக நோபல் பரிசு வென்ற ஜோடி வில்லியம்ஸ் ஆகிய இருவரையுமே பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை முன்பாக உள்ள பூங்காவில் அமெரிக்காவின் போர் நிலைப்பாட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

ஈராக் யுத்தத்தில் காயமடைந்தவர்களின் உருவங்கள் வரையப்பட்ட படங்களையும் ரோஜாப் பூக்களையும் கையில் ஏந்திய வண்ணம் அவர்கள் சமாதானத்துக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினர். அங்கிருந்து அவர்களை வெளியேறக்கோரி பொலீஸார் உத்தரவிட்டபோதும் அவர்கள் மறுத்துவிட்டனர். அதையடுத்தே அவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

# சமாதான முயற்சிகளுக்கு வலுவூட்டும் தமிழ் - சிங்கள திரைப்படங்கள் தேவை

## திரைப்பட இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க தெரிவிப்பு

சமாதான முயற்சிகளுக்கு வலுவூட்டத்தக்க வகையில் தமிழ், சிங்களத் திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதன்மூலமே தமிழ் - சிங்கள உறவினை வலுப்படுத்தமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் சிங்களத் திரைப்பட இயக்குநர்களுள் ஒருவரான தர்மசிறி பண்டாரநாயக்க.

'சினி யாத்ரா' என்னும் இலங்கைச் சிங்களத் திரைப்படவிழாவின் முதலாம்நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றன. இந்த விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

உலகளாவிய ரீதியில் இன்று வரவேற்கப்படும் ஊடகங்களில் திரைப்படத்துறை பிரதான இடத்தைப் பெறுகின்றது. எனவே, இந்தத் தருணத்தில் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் - வலுப்படுத்தும் வகையில் - திரைப்படங்கள் வெளியிடப்படுமாயின் அதனை இந்த நாட்டுமக்கள் அனைவரும் கண்டுகளிக்கவும், சமாதான முயற்சிகள் வெற்றிபெற அவர்கள் தமது ஒத்துழைப்பை வழங்கவும் வாய்ப்பு ஏற்படும்.

தொடர்ந்த யுத்த சூழல் பல்வேறு அழிவுகளை ஏற்படுத்தியதுடன், நாட்டை சிறுமைப்படுத்தியும் உள்ளது. எனவே, இந்த அழிவுகள் தொடராமல் இருப்பதற்கு சமாதானம் மலர வேண்டும். சமாதானம் மலர வேண்டுமானால் நாம் அனைவரும் ஒருமித்த குரலில் அதற்காகக் குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (எ-12)

# கருப்பை கழுத்துப் புற்றுநோயை தடுக்க உதவும் 'பப்'பரிசோதனை

இலங்கையில் பெண்களுக்கு வரும் புற்றுநோய்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் முதன்மையானதாகும். இது சராசரியாக 30 பேரில் ஒரு பெண்ணுக்கு உண்டாகும் சாத்தியமுள்ளது. கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏனைய புற்றுநோய்களைப் போலன்றி இளவயதிலேயே ஏற்படுவதால் இளவயதிலேயே இறக்க நேரிடுகிறது. இளவயதில் திருமணம் முடித்தோர், பாலியல் நோய்களுக்குட்பட்டோர் மற்றும் பல தார மண முடித்தோருக்கு இந்நோய் ஏற்படும் சாத்தியம் பல மடங்காக அதிகரிக்கும்.

### நோயின் அறிகுறிகள் என்ன?

நோயின் ஆரம்பத்தில் அறிகுறிகள் ஏதும் இருப்பதில்லை. எனவே, பெரும்பாலான நோயாளிகள் நோய் உடலில் பரவிய நிலைமையிலேயே வைத்தியரை நாடுகின்றனர். இதனால், சிகிச்சை வெற்றியளிக்காமல் இறக்க நேரிடுகின்றது.

கருப்பைச் கழுத்துப் புற்றுநோயின் கருப்பைக் கழுத்தில் புண் ஏற்படுகின்றது. இதனால் ஒழுங்கற்ற குருதிப் போக்கு, வெள்ளைபடுதல், உடலுறவின்பின் குருதிப் போக்கு என்பன ஏற்படும். ஆரம்ப காலத்தில் நோ ஏதும் இருப்பதில்லை. ஆனால், நோய் பின்னர் நரம்புகளுக்குப் பரவுவதால் நாரியிலோ, அடிவயிற்றிலோ நோ என்பன ஏற்படும். முற்றிய நோயின் போது உடற் சோர்வு, மெலிவு, சிறுநீருடன் குருதிப்போக்கு என்பன ஏற்படலாம்.

### புற்றுநோய் வருமுன் காப்போம்

வளர்ச்சியடைந்த நாடுகளில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் 80 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் அங்கு சகல பெண்களுக்கும் 'பப்'பரிசோதனை (PAP SMEAR) செய்யப்படுவதனாலாகும். 'பப்' பரிசோதனைமூலம் கருப்பைப் புற்றுநோய்வரும் சாத்தியக்கூறு உடையோர் மேற்கொண்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர். நோய் வருமுன்னரே கண்டு பிடிக்கப்படுவதால் பூரண சிகிச்சை பெற்ற ஒருவர் 100 வீதம் குணமடைய முடிகிறது.

### 'பப்' பரிசோதனை என்றால் என்ன? (PAP SMEAR)

இதன்மூலம் கருப்பைக் கழுத்தின் மேற்படலம் வழித்து எடுக்கப்பட்டு நுணுக்குக்காட்டியூடாக ஆராயப்படுகிறது. கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் உண்டாகும் சாத்தியமுள்ள கலங்கள் உள்ளவர்கள் மேலதிக பரிசோதனைக்கு அழைக்கப்படுகிறார்கள்.

3வருடங்களுக்கு ஒருமுறை இப்பரிசோதனை செய்வது சிறப்பானதாகும்.

இப்பரிசோதனைக்கு சாதாரணமாக 2 நிமிடங்கள் போதுமானதாகும். பயிற்றப்பட்ட வைத்தியர் அல்லது தாதி முதலில் சிறுகுழாய் மூலம் கருப்பைக் கழுத்தை அவதானிப்பார். அதன் பின் சிறு பிளாஸ்ரிக் அல்லது மரக் கரண்டி மூலம் கருப்பைக்கழுத்தின் மேற்படலத்தைச் சுரண்டி எடுப்பார். இதன்போது வலி ஏதும் ஏற்படுவதில்லை. சோதனை முடிவுகளுக்கு சுமாராக ஒருகிழமை எடுக்கும். அசாதாரணமான கலங்கள் காணப்பட்டால் மேலதிக பரிசோதனை அல்லது சிகிச்சைகள் தேவைப்படும். பூரண சிகிச்சை அளிக்கப்பட்டால் முழுச் சுகம் ஏற்படும்.

'பப்' பரிசோதனை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் இதன் சேவைகள் எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை.

யாழ்.வைத்தியசாலையில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ள சுகாதார அமைச்சிடம் அண்மையில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இங்கு நோயியலாளர் (PATHOLOGIST) இல்லாத காரணத்தாலும் கொழும்பில் வேலைப்பளு காரணமாகவும் பரிசோதனை முடிவுகளைப் பரிசீலிக்க முடியாதெனக்கூறி 'எமது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. இந்நிலையில் தனியார் நிறுவனங்கள் சில இச்சேவையில் ஈடுபட்டுள்ளமை வசதியுடைய சிலருக்காவது நன்மை பயப்பதாகவுள்ளது. அனைவருக்கும் இவ்வசதி கிடைக்குமாறு மகளிர் அமைப்புகளும் ஏனைய பொதுநல அமைப்புகளும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். ☆

**சி.நவநீதன்**
MBBS, MS, MRCPE, DOWH
மகப்பேற்று, பெண்நோயியல் வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீடியோ படப்பிரதிகள் (இரண்டாயிரம்) 2000 விற்பனைக்குண்டு.

தொடர்பு:
சி.விஜயகுமார்
இல. 5/1, ஸ்ரான்லிக் கல்லூரி லேன்,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-6036044
(16023)

## கொழும்பு - சென்னை சிங்கப்பூரில் தங்குமிட வசதி

கொழும்பு - சென்னை - சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாடசாமான்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி. உலகைக் கட்டணத்தில் வாடகைக்கார். மேலதிக விவரங்களுக்கு:

**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15 -14 International Plaza
Singapore 079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:
அப்பு - 0065 - 975 14 941
(12204)


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் பழைய மாணவியான
**குவலயா ஸ்ரீதரன்**
அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது குடும்பத்தினரின் துயரையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(16026)

## நுணாவில் திருச்சபை மீள்பிரதிஷ்டை

வலி.தெற்கு,மார்ச்28

யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த தென்னிந்திய திருச்சபையின் யாழ்.திருமண்டலம் நுணாவில் திருச்சபை புனரமைக்கப்பட்டு நாளை சனிக்கிழமை மீள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

பேராயர் வண.சு.ஜெபநேசன் தலைமையில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் மீள்பிரதிஷ்டையின் போது சபைக்குரு பி.ஜே. சூரியகுமாரும் கலந்துகொள்ளுவார். (ஒ-152)


## தேவை

எமது விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு:-
**Stationary Shop**
இல.159, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.
(16005)

## தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.
நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
தொடர்பு:-
ஐ.மகேந்திரம்
வாணி தொலைத் தொடர்பு நிலையம்
பலாலி றோட், ஊரெழு.
(15962) 0777 - 782561


# கல்விச்சாலைக் காட்சிகள்




சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் தமிழ்த் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், கல்லூரி அதிபர் திருமதி தே.இராஜரட்ணம், முகாமையாளர் திருமதி ம.இராஜசிங்கம் மற்றும் மன்றப் பொறுப்பாசிரியர்கள், மன்றத் தலைவர், செயலாளரினால் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (எ)



வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழாவை கல்லூரி அதிபர் செல்வி ஏ.கனகரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் விருந்தினரான வைத்திய கலாநிதி சாவித்திரி திருஞானசுந்தரம்பிள்ளை, கல்லூரி உப அதிபர் திருமதி செங்கமலம் பாலேந்திரா ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-36)



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா, வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (எ-135)



வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற வி.இராசையாவின் சேவையைப் பாராட்டி ஞாபகார்த்த கேடயம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை விளையாட்டுப் போட்டியின்போது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஞாபகார்த்தக் கேடயத்தை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-152)

உதயன்

# நீதிமன்றத் தீர்ப்பால் கிடைத்ததா திருப்தி?

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த சுமார் 55 ஆயிரம் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததன் மூலம் அவர்களின் அடிப்படை உரிமையை மீறியிருக்கின்றார் இராணுவத்தளபதி. இந்த அடிப்படை உரிமை மீறலுக்கு அரசும் உடந்தை.

- இப்படித் தீர்ப்பளித்திருக்கின்றது உயர்நீதிமன்றம்.

அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளின் சரித்திரத்தில் இந்தத் தீர்ப்பு ஒரு மைல்கல்.

இந்தக் குற்றத்துக்காக - வழக்குத் தாக்கல் செய்த மூவருக்கும் உரிய நிவாரணமாக - நஷ்டஈடாக - அரசு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்தவேண்டும். இராணுவத் தளபதி மனுதாரர் ஒவ்வொருவருக்கும் தனது சொந்தப் பணத்திலிருந்து தலா முப்பதாயிரம் ரூபா வீதம் மொத்தம் தொண்ணூறாயிரம் ரூபா வழங்க வேண்டும் - இப்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

அரசின் அதிகாரி என்ற முறையில் இராணுவத் தளபதி எதேச்சாதிகாரமாக எடுத்த நடவடிக்கையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 55 ஆயிரம் வாக்காளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களில் மூவரே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்ததால் அந்த மூவருக்கு மட்டுமே, இந்தப் பாதிப்புக்கு நஷ்டஈடு - நிவாரணம் - பண வடிவத்தில் கிடைக்கப் போகின்றது. எஞ்சிய பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு - அதிலும் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் - நஷ்டஈடு கிடைக்காது.

அதுசரி. போகட்டும். விட்டுவிடலாம்.

ஆனால், இந்த 55 ஆயிரம் பேரும் அவர்களது உரிமைப்படி வாக்களிக்கத் தடுக்கப்படாமல் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் நாடாளுமன்ற பிரதிநிதித்துவ எண்கணிதமே மாறியிருக்குமே? அந்தப் பாதிப்புக்கு என்ன நிவாரணம்? நஷ்டஈடு?

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல வன்னி மாவட்டத்திலும் இதுதான் நடந்தது.

இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்கள், இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து தமது வாக்குரிமையை பிரயோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால - தடுக்கப்படாதிருந்தால் - தேர்தல் முடிவுகள் பெரும் மாற்றத்தையே தந்திருக்கும் என்பது நிச்சயம்.

ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு, தேவையான அறுதிப் பெரும்பான்மையை விட ஓர் உறுப்பினரை மட்டுமே நாடாளுமன்றத்தில் அதிகமாகக் கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் தேர்தல் நீதியாக நடத்தப்பட்டிருந்தால் - அங்கு இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்கள் உரிய இடத்தில் வந்து வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் - உயர் நீதிமன்றம் பெரும் தவறு என்று சுட்டிக்காட்டிய இராணுவத்தின் ஜனநாயக விரோத அடக்குமுறை இடம்பெறாமல் இருந்திருந்தால் - அங்கு வாக்களிப்பு ஓரளவு நேர்மையாக இடம்பெற்றிருக்கும். நாடாளுமன்றில் தமிழர் தரப்பின் கை இப்பிரதேசங்களில் மேலும் ஓங்கியிருக்கும்; மாற்றுக் கட்சிகளின் - குறிப்பாக ஐ.தே.முன்னணியைச் சேர்ந்த தரப்பின் - ஆதரவு குன்றியிருக்கும்.

இதனால், நாடாளுமன்றில் அரசை தீர்மானிக்கும் - வழிநடத்தும் - ஏகபோக அதிகாரம் தமிழர் தரப்புக்குக் கிட்ட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால், இராணுவத் தளபதியின் அத்துமீறல் போக்கால், நாடாளுமன்ற - ஜனநாயக - போராட்டம் மூலம் தமது அபிலாஷைகளை அடைவதற்கு தமிழர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய ஓர் அரிய சந்தர்ப்பம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

அரசியல்வாதிகளான அரசுத் தலைவர்களின் நோக்கத்தை - எதிர்பார்ப்பை - விருப்பத்தை - நிறைவு செய்வதற்காக, நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற பொய்க் காரணத்தைக் காட்டி இராணுவத் தளபதி நடத்திய நாடகத்தை உயர் நீதிமன்றம் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

ஆட்சியிலிருப்போரின் விருப்பத்தைச் சட்ட விரோதமான வழியில் நிறைவு செய்ய முயலும் அதிகாரிகளுக்கு இத்தீர்ப்பு நல்லதொரு படிப்பினை.

அதேவேளை, பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு உரிய நிவாரணம் கிடைத்ததாக திருப்திப்பட்டுவிட முடியாது என்பதும் கவனிக்கத்தக்கது.

# எரிபொருள் கிடைக்காததால் பயிர்கள் நீரின்றி வாடுகின்றன!

## விவசாயிகள் கவலை

எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுவதால் தாம் பயிரிட்ட மரக்கறிப் பயிர்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி போதுமான அளவில் நீர் பாய்ச்ச முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கத்தரி, மிளகாய், பயிற்றை, பாவல், தக்காளி போன்ற பயிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் தற்போது உள்ளன. இவ்வேளையில், பயிர்களுக்கு போதுமான அளவுக்கு தண்ணீர் பாய்ச்சுவது அவசியமாகும். ஆனால், எரிபொருள் இல்லாததால் ஒழுங்காக நீரிறைக்க முடியாது விவசாயிகள் தவிக்கின்றனர். வெய்யில் காலம் ஆரம்பித்துவிட்டதால் நீரின்றிப் பயிர்கள் அழியும் நிலையில் உள்ளன. மரக்கறிகளின் விலைகள் குறைந்துள்ள நிலையில் அதிக விலை கொடுத்து எரிபொருள் வாங்கி நீரிறைக்க முடியாதுள்ளது. இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ள விவசாயிகள், தமக்கு கட்டுப்பாடின்றி மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தத்தமது பகுதி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (ஒ-117)

# மாதர் மான்மியம்

## கற்பினைக் காக்க வாரீர்!

கற்பினைச் சூறையாடும்
கயவரைக் கட்டி வந்து
நாற்புற சந்தி தன்னில்
நடுவனாய் நிற்க வைத்து
கற்புடை நங்கையர் தம்
கவலையை களைந்த பின்னே
அற்பனை கூண்டில் ஏற்றி
ஆயுள் தண்டனையும் நல்கி
பொற்புடை மாதர் தம்மை
பூரிக்க வைக்க வேண்டும்
இப்பொறுப்பினை இளைஞர் ஏற்றால்
இங்கில்லை கவலை கண்டீர்!

- விகடகவி.

பழைய மாநகர சபைக் கட்டடப் பகுதியில்

# முகாம் அமைக்கும் முயற்சிக்கு எதிராக தமிழ் எம்.பிக்கள் குரல் கொடுக்க வேண்டும்!

## சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்28

மாநகர சபைக் கட்டடம் இருந்த இடத்தில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை கைவிடச் செய்ய அனைத்துத் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்துக் குரல் எழுப்ப வேண்டும்.

மேற்படி முகாம் அமைப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைக் குழுவின் சார்பில் சி.வி.கே.சிவஞானம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணக் கோட்டை, பழைய பொலீஸ் நிலையம், மாநகர சபை, வாடி வீடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கி யாழ்ப்பாண நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் திட்டம் மாநகர மக்களை குறிப்பாகவும் மாவட்ட மக்களை பொதுவாகவும் பாதிக்கும் விடயம் ஆகும். அத்துடன், இது யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கையுமாகும்.

இரண்டு தேசியப் பாடசாலைகள், பொது நூலகம், கிறிஸ்தவ தேவாலயம், இந்துக் கோவில், விளையாட்டரங்கு, சிறுவர் பூங்கா, திறந்த வெளி அரங்கு போன்றவற்றுக்கு அருகில் இராணுவ முகாம் அமைவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

மேலும், இப்படி முகாம் அமைக்கப்படும் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கரையோர மக்களின் மீன்பிடித் தொழிலும் பாதிப்படையும்.

எனவே, இந்த நடவடிக்கையை எதிர்த்து சகல தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுத்து இந்த நடவடிக்கையை அரசாங்கம் கைவிடச் செய்ய வேண்டும் எனக் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஒ)

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும்

# சின்ன வெங்காயத்தைச் சந்தைப்படுத்த 'சதொச' நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## பண்டத்தரிப்பு கூ.சங்கத் தலைவர் கோரிக்கை

சண்டிலிப்பாய்,மார்ச்28

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் சின்னவெங்காயத்தை தென்னிலங்கையில் சந்தைப்படுத்த கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதொச) உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் பண்டத்தரிப்பு பலநோ.கூ. சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம்.

இது குறித்து அவர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயத்தை இங்கு இறக்குமதி செய்கின்றது. இதனால் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.35 ஆக இங்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதே வெங்காயத்தை யாழ்.குடாநாட்டில் இருந்து பெறுவதன் மூலம் யாழ்.மாவட்ட விவசாயிகள் போதிய வருமானத்தைப் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகும். எனவே, குடாநாட்டில் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்படும் வேளையில் இந்தியாவிலிருந்து வெங்காயம் எடுத்துவரப்படுவதைத் தடைசெய்ய வேண்டும்.

அத்துடன், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை நேரடியாக வந்து கொள்வனவு செய்யவேண்டும். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான தாங்கள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ-135)

# திட்டங்களை நடைமுறைப்படுத்த தமிழ்நாட்டைப் பின்பற்றுங்கள்!

## மிலிந்தவுக்கு ஜெயலலிதா இப்படி ஆலோசனை

புதுடில்லி,மார்ச்28

இலங்கையில் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை முன்மாதிரியாகப் பின்பற்றுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆலோசனை கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்து பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பெண்கள் தொடர்பாக தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட திட்டங்களினால் அங்கு பெண்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் -

அவ்வாறான திட்டங்களை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கைப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் எனவும் - ஜெயலலிதா கூறினார்.

அத்துடன் தமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கண்டறிவதற்காக மகளிர் தூதுக்குழு ஒன்றினை அனுப்பிவைக்குமாறு அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் ஜெயலலிதா கேட்டுக்கொண்டார்.

இப்பேச்சுகளின்போது இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல், கச்சதீவு கடல்பிரதேசத்தில் இலங்கை - இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கும் எல்லையை நிர்ணயித்தல், இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் அமைக்கப்படவுள்ள தரைப்பாலம் ஆகியவை குறித்தே பேசப்பட்டது. இப்பேச்சுகளின்போது இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரும் தமிழ்நாட்டில் உள்ள பிரதித் தூதுவரும் அமைச்சருடன் கலந்துகொண்டனர். (ஒ-4)



தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் சந்தித்த போது....

**நாளை**

பங்குனி 15
சனிக்கிழமை
(29.03.2003)
திதி: துவாதசி
முற்பகல் 9.59 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 6.02 வரை.
சுபநேரம் : 3.13 - 4.43
ராகுகாலம் : 9.13 - 10.43
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பணிந்து செல்லத் தயாராக இருப்பவன் சுயமரியாதையை இழக்க நேரிடும்.

# PRESIDENT



**PRESIDENT CFL**

பல்புகள் தற்போது இலங்கை தர நிர்ணய சபையின் (SLSI) சிறந்த மின்சார சேமிப்பை உறுதிபடுத்தும் நட்சத்திர தராதரத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது, என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

அத்துடன் இலங்கை மின்சார சபையின் இலகு தவணை திட்டத்திலும் கிடைக்கும்

80 % சேமிப்பு

குடா நாடெங்கும் கிடைக்கும்

ISO 9002

போலிகள் தொடர்பாக விழிப்பாயிருங்கள்


## இதயத்தின் ஆழத்தில் வசந்தத்தின்... முதலாமாண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 23 . 07 . 1957



ஆண்டவனின் அடியில் 08 . 04 . 2002

### திருமதி தெய்வேந்திரம் வசந்தரஞ்சினி

(வரதம்)

திதி: அபரபக்க ஏகாதசி

ஆண்டொன்று சென்றது
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டு பல சென்றாலும்
ஆறிடாது எம் துயரம்
ஆயிரம் உறவு இருந்தென்ன
அம்மா நீங்கள் இல்லையே!
நீங்கள் இருந்த இடமெல்லாம் - உங்கள்
விம்பந்தான் தெரிகிறது
எம் வாழ்வின் வசந்தமே - எமை
பிரிந்து ஓராண்டில் - உங்கள்
நினைவுடன்....
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*வாகையடி, மீசாலை மேற்கு.* (15934) - குடும்பத்தினர்.

## கஜேந்திரகுமார் எம்.பி. தென்மராட்சி அழிவுகளை பார்வையிட்டார்

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் நேற்று முன்தினம் சாவகச்சேரிக்கு விஜயம் செய்து சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டார்.

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலயத்திற்கு சென்ற இவர், அங்கு சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டதுடன் சேதமடைந்துள்ள குழந்தை ஜேசு முன்பள்ளி கட்டடத்தினைப் புனரமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்தார்.

அப்பகுதி கடற்றொழிலாளர்களைச சந்தித்த கஜேந்திரகுமார் எம்பி., தடை செய்யப்பட்டுள்ள கச்சாய் கடலேரியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி பெற்றுத்தருவதாகவும் -

இராணுவ வேலிகளை அகற்றி மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும் - உறுதியளித்தார்.

பின்னர் சாவகச்சேரி நகரசபைக்கு விஜயம் செய்த இவர், சபையின் சேதமடைந்த கட்டடங்கள், சந்தை, கடைத் தொகுதிகள் ஆகியவற்றையும பார்வையிட்டார். (எ-31-117)

## வடமராட்சி கிழக்கில் கள்ளுத் தவறணைகள் மீண்டும் திறப்பு

பன்னிரண்டு வருடங்களின் பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் ஆழியவளை, கட்டைக்காடு, கேவில், சுண்டிக்குளம், இயக்கச்சி ஆகிய இடங்களில் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் மீண்டும் கள்ளுத் தவறணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கிடையில் - முகமாலை, கிளாலி தவிர்ந்த ஏனைய 16 கள்ளுத் தவறணைகளும் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன என்றும் சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

- மீளக்குடியமர்ந்துள்ள சங்க அங்கத்தவர்கள் தமது தொழில்களை ஆரம்பித்துள்ளதால் பெருமளவு கள்ளு உற்பத்தி செய்யப்பட்டு தவறணைகளுக்கு வழங்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-117)

## தவக்காலத் தியானம் இம்முறை சாட்டியில்!

யாழ்.மறை மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான தவக்காலத் தியானம் இம்முறை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4மணி வரை தியான வழிபாடுகள் நடைபெறும். (எ-30)

## எள்ளுச்செய்கை ஆரம்பம்

சுழிபுரம், காட்டுவயல் பகுதியில் உள்ள நிலங்களில் கடந்த வாரம் பெய்த மழையைத் தொடர்ந்து எள்ளு விதைப்பு நடைபெற்று வருகின்றது.

சகல வயல் சொந்தக்காரர்களும் தத்தமது வயல்களில் பெய்த மழையைத் தொடர்ந்து நிலம் நல்ல ஈரலிப்பாக உள்ளதுடன் உழுவதற்கு பதமாக இருப்பதாகவும், இதனால் எள்ளு விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எள்ளு விதைப்பால் சென்ற ஆண்டும் இப்பகுதி நிலம் நல்ல விளைச்சலைக் கொடுத்தது குறிப்பிடத்தக்கதாகும். (எ-28)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 07 - 11 - 1917



உதிர்வு 26 - 02 - 2003

### அமரர் சங்கரி முருகப்பா

திதி: 28.08.2003

எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கும்
எம் அன்பின் திருவுருவே!
எம் இதயமெலாம் நிறைந்து நிற்கும்
உங்கள் நினைவுதனை என்றென்றும்
நினைப்பதிலே ஆறுதல் அடைகின்றோம்.

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*கோவில் வீதி (தம்பான்)*
*வரணி வடக்கு, வரணி.* (16016)

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 - 08 - 1919



உதிர்வு 20 - 03 - 2001

### அமரர் செல்லமுத்து சரவணமுத்து

திதி 28-03-2003

அன்பினால் எம்மை ஆண்டு
ஆறாத்துயரில் விட்டுச் சென்ற ~ எங்கள்
அன்புத் தெய்வத்தை காலங்கள் சென்றாலும்
மறப்பதற்கு நாம் இல்லை ~ என்றும்
எம் நெஞ்சினில் நிறைந்திருக்கும் உமது நினைவுகள்!
சாந்தி! சாந்தி! சாந்தி!

தற்காலிக விலாசம்:
*கைதடி வடக்கு,*
*கைதடி.* (15964)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 25 - 03 - 1948



மறைவு 26 - 02 - 2003

### ஆ.கந்தையா ஜெயராசா

(விவசாயத் திணைக்கள ஊழியர், முல்லைத்தீவு)

எமது நல்வாழ்விற்கு ஒளியேற்றி வைத்த அன்புத் தெய்வத்தை 31ஆம் நாளில் நினைவு கூர்வதுடன் அவரது ஆத்மசாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று(28-03-2003) வெள்ளிக்கிழமை காலை 8.00மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கச்சார்வெளி,*
*பளை.* (C/27008)

மனைவி, பிள்ளைகள்.


# நில்கமல் வழங்கும் புத்தாண்டு விசேட வெகுமதி

Nilkamal



இலவசம்

6 கையுள்ள நாற்காலிகளை கொள்வனவு செய்து
நோவா ஸ்டூல்
ஒன்றை இலவசமாக பெறுங்கள்
இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
அனைத்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

யாழ். விநியோகஸ்தர்
அம்பிகை களஞ்சியம்
41, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2222511

**Nilkamal Eswaran plastics (Pvt) Ltd.**
329, Madapatha Road,
Balaketthara, Piliyandala.
Tel:074-215268,074-212661-3, Fax:074-215267
E-mail: mktnilkamal@eureka.lk

# இஸ்ரேலின் விவசாய அபிவிருத்தியும் யாழ்ப்பாணத்தில் அது பற்றிய நோக்கும்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளர் பொன்னையா ஆழ்வாப்பிள்ளை அண்மையில் இஸ்ரேலுக்குச் சென்று அங்கு விவசாய அபிவிருத்தி பற்றிய ஆய்வைச் செய்திருந்தார். அவர், தான் அங்கு கண்டவற்றையும் அதனடிப்படையிலான யாழ்ப்பாண விவசாய அபிவிருத்தி பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.**

இஸ்ரேல் என்ற நாடு மத்திய தரைக் கடலுக்கும் வடக்கே நீட்டப்பட்ட இந்திய சமுத்திரத்தின் பகுதிகளான "செங்கடல்", "பேர்சியன் குடா" என்பவற்றுக்கும் இடைப்பட்ட பாகற்காய் வடிவமான ஒரு நாடாகும். இதன் எல்லைகளாக வடக்கே லெபனான் தேசமும், வடகிழக்கே சிரியாவும், கிழக்கு தென்கிழக்காக ஜோர்டானும், தென்மேற்கே எகிப்தும் மேற்கே மத்தியதரைக்கடலும் காணப்படுகின்றன. பத்து வருடங்களுக்கு முன் 46 லட்சம் மக்களும் தற்பொழுது 62 லட்சம் மக்களும் வாழ்கின்றனர். கலப்புப் பொருளாதாரத்தை நம்பி வாழும் இந்த நாட்டு மக்கள் விவசாயத்திற்கும் அதன் ஆய்வு அபிவிருத்திகளுக்கும் மிகக்கூடிய பங்களிப்புச் செய்துள்ளனர்.

## புவியியல் அமைப்பு

இங்கு பலவகையான இயல்புகளைக் கொண்ட தரைத்தோற்றம், மண் அமைப்பு, காலநிலை என்பன காணப்படுகின்றன. கடந்த மாசி மாதம் (2003) இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று விவசாய ஆய்வு அபிவிருத்தி பற்றிய பல நவீன முறைகளை நான் அறிந்து கொண்டேன். பல நாடுகளிலிருந்தும் 24 விஞ்ஞானிகள் வந்தனர். இலங்கையிலிருந்து ஒருவரே இதற்கு தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நாடு ஒரு மலைப் பிரதேசம். இந்நாட்டின் தென் பகுதியில் காணப்படும் மலைகள் உலர்ந்து வரண்டு எந்த ஓர் உயிரினமோ, தாவர வர்க்கமோ அற்று வெறிச்சோடிக் கிடக்கிறது. அதன் தரைத்தோற்றம் அப்படி. கடல் மட்டத்திலிருந்து 200மீற்றர் வரை ஆழமான தரைகளும் இங்கு காணப்படுகின்றது. வரண்ட பள்ளத்தாக்குகளில் நீரோடிய சான்றுகள் காணப்படுகின்றன. விரைவாக வானிலை அழிவு கொண்ட கற்பாறைகள் பல தேர் போன்று தோற்றமளிக்கின்றன. நடந்துசென்று பார்த்த பொழுது பயம் உடம்பைப் பற்றிக் கொண்டது. சில இடங்களில் அரேபியர்கள் நாடோடி வாழ்க்கை செய்தமை தெரிந்தது.

நன்னீரான ஜோர்டான் ஆறு 209 மீற்றர் ஆழமான (அதாவது கடல் மட்டத்திலிருந்து ) கலிலிக் கடலில் கலக்கிறது. இதுவே விவசாயத்திற்குப் பயன்படும் 50 சதவீத நன்னீரை இஸ்ரேலுக்கு வழங்குகிறது.

## காலநிலை

இங்கு 4வகையான அமைப்புள்ள புவித்தோற்றம் காணப்படுகின்றது.

மத்தியதரைக் கடலை அண்டிய பிரதேசம், தெற்கேயுள்ள மலைப் பிரதேசம், அகுவா (Aqava) குடாப் பிரதேசம், நெகெவ் - இஸ்ரேல் பாலைவனம் (Negev - Israels desert).

பாலைவனப் பகுதிகளில் வருடத்துக்கு 25 மி.மீ மழை வீழ்ச்சியும், ஜோர்டான் ஆற்றை அண்டிய வட பகுதியில் 720மி.மீ மழைவீழ்ச்சியும் பெறப்படுகின்றது. எமது நாட்டில் சராசரியாக 22 ஆயிரம் மி.மீ மழை பெய்கிறது. இருந்தும் எமது நாடு விவசாயத்தில் முன்னுக்குவரமுடியாது தளம்புகின்றது. இதற்கு என்ன காரணம்?

நீர்வளம், நிலவளம், மனிதவளம், பொருள் வளம், இடவளம், எல்லாம் எம்மிடம் உண்டு. ஆனால், தொழில் வளம் செழிக்கவில்லை. சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஆற்றல் எம்மக்களிடையே அறவே வரவில்லை. இவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

## நீர்வளம்/நீர்ப்பாசனம்

இஸ்ரேல் நாட்டில் கிடைக்கும் 75சதவீத நீர் விவசாயத்திற்குப் பயன்படுகின்றது. நீர் பற்றாக்குறையை அந்த நாடு சிரமப்பட்டு நிறைவேற்றி வருகிறது. நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள கலிலி கடலில் நீர் (நன்னீர்) தெற்கு நோக்கி குழாய்கள் மூலம் கடத்தப்படுகின்றது. நாடு முழுவதும் பல இடங்களில் குழாய்களின் முடிவிடங்கள் காணப்படுகின்றன. வெவ்வேறு நிறம் தீட்டப்பட்ட குழாய்கள் காணப்படுவது அந்த நாட்டின் ஒரு சிறப்பம்சமாகும்.

*வெண்ணிறக் குழாய்* :- இது குடி தண்ணீர் வழங்கும், அத்துடன், தேவையான இடங்களில் வால்வுகள் அமைந்து மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

*பச்சைநிறக் குழாய்*:- இது தரைக்கீழ் நீரைக் கொண்டு செல்கிறது. விவசாயம், நகர தேவைகளுக்குப் பயன்படுகிறது.

*நீலநிறக் குழாய்*:- உப்பு அகற்றப்பட்ட கடல்நீர் கொண்டு செல்லப்படுகிறது. இந்நீர் நகர தேவைக்கும் விவசாயத் தேவைக்கும் பயன்படுகிறது.

### குடாநாட்டுப் புகையிலைச் சுருட்டை சர்வதேச தரத்துக்கு உயர்த்த முடியாதா?

*சிவப்பு நிறக் குழாய்*:- இது நகர வடிநீர், அதாவது கழிவு நீர் கொண்டு செல்லும் விவசாய நிலங்களில் ஆங்காங்கே சிவப்புநிறக் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளதைக் காண முடியும். தாங்கும் விவசாயம் (Sustainable agriculture), சேதன பண்ணை உற்பத்தி (Organic farming) போன்றவற்றில் இது முக்கிய பங்கு வகிக்கின்றது.

சில இடங்களில் மலையை அகற்றி மட்டப்படுத்துகின்றனர். இதற்கு மேல் நன்மண் இட்டு தூர்வையாக்கி 'கடல்நீர்' (நன்னீர் - desalinatcd water) தெளித்து, பசளையற்ற நோயற்ற பச்சைவீட்டுத் தாவர வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வகையான விவசாயம் தாங்கும் விவசாயம். சேதனப் பண்ணை உற்பத்தி என்பவற்றை விளக்கி நிற்கின்றது.

## விவசாயம்

இஸ்ரேல் விவசாய விருத்தி உலக பயிர் உற்பத்தியின் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக யவ்பா (Jaffa) என்ற வியாபாரக் குறியுடன் (Trade mark) மஞ்சள் தோடம்பழம் உலகெங்கும் விற்பனை செய்யப்படுகிறது. பழமர உற்பத்தியில் என்னுடைய ஆர்வத்தைக் காட்டியதன் பயனாக அங்கு வந்த அயல் நாட்டு விஞ்ஞானிகள் என்னை **Mr. Jaffna** என்று அழைப்பர்.

தோடம்பழச் செய்கையை நாம் மேற்கொள்ள முடியுமா? எமது யாழ்ப்பாணத்தில் ஏன் மஞ்சள் தோடம்பழம் உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறது. என்னுள் எழுந்த கேள்வி இது.

இஸ்ரேலில் தோடம் பழமரம் ஒரு வேலிப் பயிராக (கதிகால்) இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். மரவளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு தேவையானளவு சொட்டு நீர்ப்பாசனம் செய்யப்படுவதுடன் வருடம் பூராவும் மின்விளக்குப் போட்டது போல காய்த்துத் தொங்குகின்றன அவை.

தோடம்பழம் பிடுங்கினால் யாரும் கேட்கமாட்டார்கள். என்னுடைய அறைத் தோழன் முசோர் (ஸிம்பாப்வே நாட்டவர்) சராசரியாக 5 தோடம்பழம் ஒரு நாளைக்கு சாப்பிடுவார். நானும் கூடத்தான். அருமையான பழம். இப்பழங்கள் 16வீதம் வரை இனிப்பைக் கொண்டதுடன் மிகவும் கவர்ச்சிகரமான தோற்றமும் தூய்மையானதாகவும் காணப்படுகின்றது. இந்த நாட்டில் 67வீதம் மலைப்பரப்பாக இருப்பினும் தற்பொழுது 17வீதம் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு 3.9வீதம் அந்நியச செலாவணியைப் பெறுகின்றன.

தொழில்நுட்பம் உயர்வாக இருந்தாலும் இஸ்ரேல் ஒரு விவசாய நாடு என்பதில் அந்த மக்கள் மிகவும் பெருமையடைகின்றனர். இங்கு 1960 இல் ஆய்வும், அபிவிருத்தி வேலைகளும் தொடங்கப்பட்டன. 43வருடத்தில் உலக சந்தையைப் பிடித்து, பழ ஏற்றுமதி செய்வதில் முன் நிற்கின்றது அந்த நாடு.

தோடை, அப்பிள், பியேர்ச், லீச், பேர்ச்சம்பழம், தக்காளிப்பழம், ஆனைக் கொய்யா (**Avacado**), மாம்பழம், வாழைப்பழம், இனிப்பு மிளகாய், நீள் மிளகாய் போன்ற உற்பத்திப் பொருள்கள் தரம் உயர்த்தி பெட்டியில் அடைத்து ஐரோப்பிய நாடுகளுக்கும் குறிப்பாக ஜேர்மன், பிரான்ஸ், லண்டன் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் கப்பல் மூலமாக அன்றி வான் மூலமாக அனுப்பி அதியுயர் அந்நிய செலாவணியைப் பெறுகிறது இஸ்ரேல்.

பல வகையான பயிர்களை உற்பத்தி செய்யும் ஆர்வம் இஸ்ரேலிய மக்களிடம் இல்லை. உற்பத்தி செய்யும் பொருள்களை தரமுயர்த்தவே உள்நாட்டு ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்கின்றனர். இதற்கான அறுவடைக்குப் பின்னாலான தொழில்நுட்பம் (**Postharvest technology**) அங்கு நன்கு விருத்தியடைந்து இருக்கிறது. இத்தொழிற்பாடு மனிதனின் உணவில் விரைவான தேவையை உடன் பூர்த்திசெய்யவல்லது. எல்லா வகையான விவசாய தொழிற்பாடும் உயர்மட்ட அணுகுமுறை (**Professional way of approach**) கொண்டது. இதற்கு அவர்களின் பிரசித்தமான சொட்டுநீர்ப்பாசனமும் ஒரு காரணம்.

அத்துடன், 60லட்சம் மக்களைக் கொண்ட அந்த நாடு 2020இல் ஒரு கோடி மக்கள் செறிவு வர வேண்டுமென எதிர்பார்ப்பது பொருளியலாளர்களுக்கு ஒரு பெரிய சவாலாக அமைந்துள்ளது. அதாவது, யாழ்ப்பாணம் 50லட்சம் மக்களை மட்டுமே தாங்கும் என்ற கருத்துக்கு முரண்பட்ட போக்கு. எனவே,எமது மண்ணின் விவசாய தொழில்நுட்ப முறைகளை பூரணமாக மாற்றி அமைக்க வேண்டுவது மிக அவசியம்.

## விவசாய விருத்தி

தனிப்பயிருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சர்வதேச மட்டத்திற்கு அதனை உயர்த்தவேண்டும். இதற்காக நாம் தெரிவுசெய்யும் பயிர் எப்படி இருக்கவேண்டும்? மக்களால் பயிரிடக்கூடியதும், சேமிக்கக்கூடியதும், உயர் வருமானம் கொண்டதுமான புகையிலைச் செடி ஒன்றுதான் அத்தகைய பயிர்.

அமெரிக்காவில் கரோலினா மாவட்டம் தனது மொத்த வருமானத்தையும் புகையிலையிலிருந்து மட்டுமே பெற்றுக்கொள்கின்றது. இன்று கடந்த 10 வருட நிலைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கை இரண்டு மடங்காக்கப்பட்டுள்ளது. அதாவது, கடந்த ஆண்டு (2002) 490 ஹெக்டேயரில் பயிரிடப்பட்டது. நாம் இரண்டு வகையான சுருட்டு வைத்திருக்கின்றோம். அவை உலகத்தரத்துக்கு போக முடியுமா? உலகத் தரத்திற்கு உயர்த்தப்பட்ட சுருட்டுக்கள் ஒன்று ரூபா 500 வரை செல்கின்றது.

உதாரணமாக:-

1.Caprain black, 2.Carios torano, 3. Dutch master, 4.Cabana, 5.Supre sweet, 6.Back woods, 7.Villiger, 8.King edward, 9.Cubido, 10.Cameroon.

கற்றவர்கள் புகையிலை பற்றிப் பிழையான கருத்தைத் தூவி எமது மக்களைப் பாழடிக்கிறார்கள். மற்றது "Organic farming" என்று சொல்லி விவசாயிகளை வெருட்டுகிறார்கள். பூச்சிகொல்லி வேண்டாம், பசளை வேண்டாம் தனிய எருவுடன் பயிர் நடுங்கள் என்று விவசாயிகளை விளக்கமற்ற நிலைக்குத் தள்ள முற்படுகின்றனர். எனவே, நாடு முழுவதும் தாவர பாதுகாப்பு உற்பத்தித் திட்டங்கள் போடுகிறார்கள். (**Plant protection production planning for implementation -PPPPI)** எமது நாட்டுக்கு இது பொருந்துமா? நடைமுறைப்படுத்த விவசாயிகள் தயாரா? அறிவுரை கூறுபவர் யார்? அறிவாளர்களை உருவாக்க எமது நிர்வாகம் இடம் தருமா? என்று சிந்திக்க வேண்டும்.

இஸ்ரேலிய மக்கள் இயற்கை மூலவள முகாமைத்துவ அறிவு சார் நிலைமைகளை (**Natural Resources Management**) அனுசரித்து அபிவிருத்திகளை மேற்கொள்கின்றனர். இதில் சூழல் சமநிலை பேணும் முறைகளையும் அவர்கள் இணைத்துச் (**Ecologically balanced System**) செல்வதைக காணலாம். அவர்களுடைய ஆய்வுகள் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

1) பிறப்புரிமையியல் சார் உயர் பயிர்வர்க்க தோற்றுவிப்பு (New variety).

2) இப்பயிர்களின் அறுவடைக்குப் பின்னாலான தொழில் நுட்ப ஆய்வும் வர்த்தகமும் (Advancement in postharvest technology and commercialzation).

3) விலங்கினங்களில் பரம்பரை அலகுமாற்ற ஆய்வுகளை மேற்கொள்ளல் (Gene therophy and bio technology).

4)தாவர - மண் - நீர் தொடர்பு ஆய்வுகள் (Susrainability in soil - water - crop relationship)

5) அறுவடைக்குப் பின்னாலான பரிகரணமும் சேமிப்பும் (Processing and storage).

6) இயந்திர உற்பத்தியும் பாவனைகளும் அத்துடன், நவீன பொறிமுறைகளும் றோபோக்களும் (Advanced mechanics and robotics).

7) தாவர - பூச்சி - நோய் தொடர்பு, பிறப்புரிமைப் பொறியியல் தடைகள் (Plant - insect - pathogen interaction and genetically engineered resistance)

8) உயிர் பூக்களின் சேமிப்பும், பராமரிப்பும் ஏற்றுமதியும் (Fresh flower research and export).

9) மீன் குஞ்சு வளர்ப்பில் பால் பிரிப்பு ஆய்வுகள். (Sensor based sex defermination in fishlings).

10) பழங்களின் உற்பத்தி பரிகரணம், பொதியிடல், குளிரூட்டல், ஏற்றுமதி செய்தல் (Fruit culture, treatment, packing, icing and export)

ஒரு பார்வையில் நோக்கின், பயிர் உற்பத்திமுறைகள் அனைத்தும் தொழில்நுட்ப ரீதியில் உயர் மட்டத்துக்கு வந்துவிட்டன. உதாரணமாக 5ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள பயிர்களின் வெப்பநிலையை 27.5 பாகை செல்சியஸாக தொடர்ந்து பேணமுடியும். எனவே, பரம்பரையில் பரிகரணம் செய்து அறுவடைக்குப் பின்னாலான விளைச்சலை உயர்த்துவதே அவர்களின் ஆய்வின் அடிப்படைக்கரு. அதாவது, Bio technology and postharvest technology அத்துடன், விரைவான வளர்ச்சிக்கு உள்நாட்டு ஆய்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது Local research for quick development. குறிப்பாக கடல் நீரின் உப்பை அகற்றி நன்னீராக்கி நீர்ப்பாசனம் செய்து தரமான தோடம்பழத்தைப் பெற்று, குளிரூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து 10மடங்கு வருமானத்தை (1000%) பெறுவது அவர்களின் சிறந்த ஆய்வின் விளைவு எனக்கொள்ளலாம்.

அதாவது, வறுத்த பூசணிக் கொட்டை 100 அல்லது 70கிராமின் சர்வதேச விலை ரூபா 230/- அதாவது, 2.3 அமெரிக்க டொலர்கள் எமது நாட்டில் இது ரூபா 10இற்கு மட்டுமே போகமுடியும்.

இயற்கையாக எமக்குக் கிடைத்த நீரை விரயமாக்கி வயல்களில் புல் உற்பத்தியை அதிகரித்து எமது பிற்சந்ததிகளுக்கு பல கஷ்டங்களை ஏற்படுத்துவதை எமது விஞ்ஞானிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். நீரைக் கட்டுப்படுத்துவதனால் 5 மடங்கு விளைச்சலைக் கூட்டமுடியும் என இஸ்ரேலிய விஞ்ஞானி ஒருவர் கண்டு பிடித்துள்ளார். எனவே, சேதனப் பண்ணை உற்பத்தியை (organic farming) பச்சை வீடுகளில் மேற்கொள்ளல் எமக்கு பொருத்தமாக வருமா என்று சிந்திக்கவேண்டும்.

எமது விவசாய சிந்தனைகள் ஆழமாக இருந்தும் நடைமுறைகளை மட்டுப்படுத்தும் சூழல், அரசியல் பொருளாதாரக் காரணிகள் எமது அபிவிருத்தியை பின்தள்ளுகின்றன என்பதை உணர்ந்து சமூக விடுதலைக்காக உழைப்போமாக. ★

**பொன்னையா ஆழ்வாப்பிள்ளை**
(B.Sc. Ag. (Hons) SL, M.Sc. Japan (Machinery), Ph. Dip. in. Prov. Adm. PIM, Univ. of Sri Jayewardanapura FM and PHT (Israel)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I, விவசாய பொறியியற்றுறை,
விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

# அரச அதிபர் வராததனால் விவசாயக் கூட்டம் இல்லை

## காத்திருந்த போடிமார் கடும்சீற்றம்

சாய்ந்தமருது,மார்ச்28

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்திலுள்ள 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2003 சிறுபோக வேளாண்மை செய்வதற்கு அம்பாறை அரச அதிபர் தலைமையில் கூட்டப்பட்ட ஆரம்பக் கூட்டத்திற்கு குறிப்பிட்டபடி அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் எவரும் கலந்துகொள்ளாததால் கூட்டத்திற்கு வருகைதந்த விவசாயப் போடிமார்கள் ஒரு மணித்தியாலத்திற்கும் அதிகமான நேரம் காத்திருந்துவிட்டு மண்டபத்தைவிட்டு ஆத்திரத்துடன் வெளியேறினர்.. விவசாய வளர்ச்சியில் அரச பிரதிநிதிகள் காட்டும் அக்கறை இதுதானா? என விசனத்துடன் கேள்வியும் எழுப்பினர்.

கல்லோயா ஆற்றுநீர் மூலம் நெற்செய்கையில் ஈடுபடும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்திலுள்ள கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, பாலமுனை, சம்மாந்துறை, மல்வத்தை ஆகிய விவசாயப் பெரும்பாகப் பிரிவுகளில் உள்ள 42 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகளுக்குச் சொந்தமான விவசாயப்போடிமார்களின் பிரதிநிதிகள் வருகைதந்திருந்த இக்கூட்டம் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது அல்-ஹிலாஸ் வித்தியாலயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கூட்டம் அம்பாறை அரச அதிபர் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கூட்டமண்டபம் போடிமாரின் பிரதிநிதிகளாலும் திணைக்களத் தலைவர்களாலும் நிறைந்து வழிந்தது.

கூட்டம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மாலை 4 மணியாகியும் அரச அதிபரோ, பிரதேச செயலாளர்கள் எவருமோ வரவில்லை.

உபதிட்ட முகாமைத்துவ தலைவர்களில் ஒருவரான ஏ.பி.முஹைதீன் பாவா தலைமையில் இக்கூட்டத்தை ஆரம்பித்தபோது, விவசாய போடிமார் பிரதிநிதிகள் கூட்டச்சட்ட விதிகளை சுட்டிக்காட்டி இப்படிக் கூட்டத்தை நடத்த முடியாது எனக்கூறி மண்டபத்தை விட்டு ஆத்திரத்துடன் வெளியேறினர்.

சட்டப்படி சிறுபோக விவசாய ஆரம்பக் கூட்டத்தை அரச அதிபரோ அல்லது பிரதேச செயலாளர் ஒருவரோதான் நடத்தி தீர்மானங்களை எடுக்கவேண்டும். இரு பகுதியினருமே அக்கறை கொள்ளாததால் கூட்டமில்லை. சிறுபோக வேளாண்மை பாதிப்புக் கூட்டத்திற்காக காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றம். இதுதான் அரச சேவையின் இலட்சணம் என்று பலரும் குறைபட்டுக்கொண்டனர். (ம)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய கட்டில், மெத்தை, றேடியோ (பனசோனிக்), கமறா (கனன்), பழைய செற்றிசெற் விற்பனைக்குண்டு. இரண்டு நாள்கள் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: 102, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (16035)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் வேண்டிய நிறைகளில் உயிருடனும், இறைச்சியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இல.205/1, ஆசீர்வாதம் ஒழுங்கை (சந்தி), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (16023)

### திருமண சேவை

1979, பரணி, செவ்வாய் 4, படித்த, அழகிய, சுவிஸில் உள்ள மணப் பெண்ணுக்கு ஐரோப்பிய நாடுகளில் வதிவிமை பெற்ற மணமகன் தேவை. மணமக்களின் தேர்வுக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (15930)

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1958, 1960, 1964, 1965, 1967, 1969, 1970, 1971, 1972 ஆண்டுகளில் பிறந்த அரச உயர்பதவிவகிக்கும் மணமகனகளுக்கு தகுந்த மணமகள்கள் தேவை. வெளிநாட்டு மணமக்கள் உண்டு. தொடர்பு: K.பரந்தாமன், இல.82, பலாலி றோட், திருநெல்வேலி.(16000)

### அபூர்வ ஜோதிடம்

சித்தரின் அற்புத மருந்தியலில் தீராத நோய் குணப்படல், காண்ட முறையில் அதிர்ஷ்டபலன் அறிதல். சனி, ஞாயிறு 9.00 - 2p.m சேச் முன லேன், முதலிகோயிலடி, கொக்குவில் மேற்கு. (15999)

### தவறிவிட்டது

க.திருச்செல்வம் (ஆசிரியர்) என்பவரது ஒரு தொகைப்பணம் (4000/) 23-03-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 - 12.30 மணிக்கும் இடையில் நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நீர்வேலி மத்தி, நீர்வேலி எனனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (16010)

### லாண்ட் மாஸ்டர் விற்பனைக்கு

பாவனையிலுள்ள (குவோட்டா) லாண்ட் மாஸ்டர்கள் (நல்லது) உடன் விற்பனைக்குண்டு.
அல்வின் வீடியோ மூவி
இல.60/4, சொலமன் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P. No. 0777 - 109493
(15962)

### வேலையாள்கள் தேவை

பலசரக்குக் கடையில் பொருள்கள் நிறுப்பதற்கும் மூடை தூக்குவதற்கும் அத்துடன் கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கும் வேலையாள்கள் தேவை.
நேரில் வரவும்.
தனபாலசிங்கம்
நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
(16027)


### கெனன் ஷார்ப்

போட்டோ கொப்பி மெஷின்கள்



உதிரிப்பாகங்கள் மற்றும் பழுதுபார்த்தல்
• Drum • Upper Roller
• Blades Lamp (220V/ 110V)
• Bushings • Developer
• Conveyor Belts
டோனர் ரூ 600/= தொடக்கம் உடன் பழுதுபார்ப்பு
சர்வீஸ் உத்தரவாதம்.
STARLIGHT ELECTRONICS
763, 2வது டிவிஷன்,
மருதானை வீதி, கொழும்பு-10.
Tel:693655, 681711. Fax :681712
E-mail:techsos@sltnet.lk
யாழ். பிரதேசத்திற்கு தொழில்நுட்ப நிபுணர் நேரடி விஜயம் செய்வார்


(பிரபாவுடன் இணைத்து ஒளிபரப்பிய செய்திக்காக)

# ரூபவாஹினி மீது ரணிலின் நஷ்டஈடு வழக்கில் சமரசம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தபோது இலங்கை ரூபவாஹினிக கூட்டுத்தாபனத்துக்கு எதிராகக் தாக்கல் செய்திருந்த குற்றவியல் அவதூறு வழக்கு சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு - கிழக்கு மாகாணங்களை இரண்டு ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளிடம் (பிரபாகரனிடம்) ஒப்படைக்கப்போவதாக பிரதமர் ரணில விக்கிரமசிங்க கூறினார் என ரூபவாஹினியின் செய்தியில் ஒளிபரப்பப்பட்டது.

இந்தச் செய்தியை ஒளிபரப்பியதால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாகவும் -

இதனால், 50 கோடி ரூபா இழப்பீடாக வழங்கப்படவேண்டுமெனவும்-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு சமரசம் செய்வதற்கு மனுதாரர்கள் இணங்கினார்கள்.

அதன்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது வருத்தத்தை தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை ரூபவாஹினி செய்தியில் சேர்ப்பதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்தது. அத்துடன் 50 லட்சம ரூபாவை வழங்கவும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் சம்மதம் தெரிவித்தது. அந்தப் பணத்தை பிரதமர் குறிப்பிடும் ஊடகப் பயிற்சி நிலையத்துக்கும், ஊடக சுதந்திரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு கொடுக்கவும் ரூபவாஹினி இணங்கியது. (ஒ)

# மாநகர சபையின் இடத்தில் முகாம் அமைக்க வேண்டாம்!

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி எம்.பி. கடிதம்

கொழும்பு,மார்ச்28

யாழ்.மாநகர சபை மண்டபம் அமைந்துள்ள காணியில் இராணுவ முகாம் அமைக்கும் படையினரின் முயற்சியை கைவிடுமாறு இராணுவத தலைமைக்கு அறிவுறுத்தல் விடும்படி கோரி ஜனாதிபதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாநகர சபையின் மண்டபம் அமைந்திருந்த காணியை படையினா முகாம் அமைக்க வழங்கக் கூடாது என்று யாழ். பொதுமக்கள் கோருகின்றனர்.

யுத்தத்தால் அழிக்கப்பட முன்னா நகர மண்டபக் கட்டடத்தில் பல அலுவலகங்கள் இயங்கி வந்தன. அழிக்கப்பட்ட அந்த நகர மண்டபத்தை மீளக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எனவே, இந்தப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு வேறு இடத்தில் அந்த முகாமை அமைக்க படைத்தரப்புக்கு அறிவுறுத்தல் விடுங்கள் - என்றுள்ளது.

(ஒ-3-4)



### பன்னிரு திருமுறை முற்றோதல்

இணுவில் விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலில் தினமும் மாலை 4மணிமுதல் 6மணிவரை திருமுறை ஓதுதல் நடைபெறுகின்றது. சிவன் அடியார்கள் வந்து பங்குகொள்ளவும். நேற்று (27.03.2003) வியாழக்கிழமைமுதல் 4ஆம் திருமுறை நடைபெறுகின்றது.

தர்மகர்த்தா
சி.பரமேஸ்வரன்.
(16030)

### சிறப்பு கௌரவிப்பு விழா



பருத்தித்துறை குருமணல் கந்தசுவாமி ஆலய கும்பாபிஷேகம், 48 நாள்கள் மண்டலாபிஷேகம் போன்றவைகளை விதிமுறை தவறாது சிறப்பாக நடத்திய, தாணு.வாசுதேவக் குருமணியை (நல்லூர் சட்டநாதர் கோயில் பிரதமகுரு) வாழ்த்தி, தங்கமடல் அணிவித்து குருவருள் பெறுகின்றேன்.

*விஸ்வகுல வீதி, பருத்தித்துறை.* (16031)
த.திருமால்
திருமாலன் நகை அகம்.

புனரமைப்புச் செய்யப்பட்ட

### நுணாவில் ஆலயத் திறப்புவிழா பிரதிஷ்டை வழிபாட்டுக்கான அழைப்பு

புனரமைக்கப்பட்ட எமது நுணாவில் ஆலயத்தின் திறப்பு விழாவும் மீள் பிரதிஷ்டை வழிபாடும் தென்னிந்தியத் திருச்சபை யாழ்.திருமண்டலப் பேராயர் அறிவர் அதி வணக்கத்துக்குரிய சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்களால் நாளை (29.03.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடத்தப்படும்.

நுணாவில்
திருச்சபைக் குடும்பத்தினர்.
(16029)

# நானே ஜீவ அப்பம்!

'நானே விண்ணில் இருந்து இறங்கிவந்த ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிப்பவன் என்றென்றைக்கும் வாழ்வடைவான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என்னுடைய மாம்சமே.'

### தவக்காலச்சிந்தனை
-24ஆம் நாள்-

அன்பானவர்களே!

கிறிஸ்துவானவர் விண்ணில் இருந்து இறங்கிவந்து உலக மக்களின் நல்வாழ்வுக்காகத் தம்மையே அர்ப்பணித்தார். உயிருள்ள அப்பமாகிய அவரின் ஜீவனுள்ள வார்த்தைகளை எந்த மனிதன் உட்கொள்கின்றானோ, அந்த மனிதன் வாழ்வடைவான். இது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தியாகும்.

இன்றைய புனித தவக்காலநாள்களில் ஜீவனுள்ள அவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம். உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனின் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வோம்.

சகோதரர் க.திருவம்பலம்

### PATRICIAN INSTITUTES
### வாகன உரிமையாளருக்கான அறிவித்தல்

எமது நிறுவனத்தில் பரிசோதிக்கப்பட்ட வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள் *(Fitners Certificate - 2003)* கிடைக்கப் பெற்றுள்ளதினால் அச்சான்றிதழ்களை, ***31.03.2003** திங்கட்கிழமை காலை **9** மணிக்கு* வந்து உடன் பெற்றுக்கொள்ளவும்.

புதிதாக வாகனங்கள் பரிசோதித்து, சான்றிதழ் பெற விரும்புவோர் வாகனங்களுடன் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

*மேலதிக விவரங்களுக்கு:*
பதிவாளர்,
**Patrician Institute,**
59, St.Patrick Road, Jaffna.
(C/27022)

### இசைநாடகம் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் ஈழத்து முன்னணி இசை நாடகக் கலைஞர்கள், யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத் தயாரிப்பில் இணைந்து 29.03.2003 சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வழங்க இருந்த

**"சத்தியவான் சாவித்திரி"** *(இசை நாடகம்)*

தவிர்க்கமுடியாத காரணங்களால் அன்றையதினம் நடைபெற மாட்டாது.

மீண்டும் எதிர்வரும் (05.04.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

(29.03.2003 சனிக்கிழமைக்குரிய பிரவேசச் சீட்டுக்கள் யாவும் 05.04.2003 சனிக்கிழமை நிகழ்வுக்குச் செல்லுபடியாகும்.)

சிரமத்திற்கு வருந்துகிறோம்.

யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம்,
யாழ்ப்பாணம்.
(16034)

### நெஞ்சகலா நினைவலைகள்



**திருமதி பரிமளகாந்தி நாகரட்ணம்**

திதி: ஏகாதசி 28-03-2003

தந்தையாய், தெய்வமாய் அரவணைத்து
எம்மைக் கண் இமைபோல் காத்து
வழி நடத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள்
என்ன, இருநூறு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

*வட்டுக்கோட்டை.* *(சி-27021)* - குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**பண்டிதர் மாரிமுத்து மாணிக்கம்**

(இளைப்பாறிய அதிபர், அளவெட்டி வடக்கு)

வேலணையை பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் மாரிமுத்து மாணிக்கம் அவர்கள் நேற்று (27.03.2003) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும் காந்திதாசன் (USA), சத்தியமூர்த்தி (U.K.), சந்திரகாந்தன் (மக்கள் வங்கி, K.K.S.), இந்துசேகரன் (U.K.), காந்திமதி (கொழும்பு), இந்துமதி (கனடா), பானுமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியலட்சுமி, சசிகலா, சுகந்தி, இந்திராதேவி, ஜெயச்சந்திரன் (கொழும்பு), சிறீகரன், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13A, 1/6 பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை.
T.P: 502061
(16028)
தகவல்:
மா.சந்திரகாந்தன்
(மகன்)

# கைத்தொழில் வளர்ச்சிக்கான தேசிய கொள்கை மிக அவசியம்

## பொறியியல் துறையில் நோபல் பரிசுபெறும் வாய்ப்புப் பற்றி ரொஷான்

*கேள்வி:-* உங்கள் சாதனைகளுக் காகப் பல விருதுகள் வழங்கப்பட் டுள்ளன. இந்த விருதுகளைப் பெறு வதற்காக நீங்கள் கடந்துவந்த வெற் றிப் பாதையைப் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* சிறுவயது முதலே தொழில் நுட்பத் துறையில் எனக்கு ஆர்வம் இருந்தது. எனது தந்தையும் அந்தத் துறையில் ஈடுபட்டிருந்ததால் எனக்கு அதில் கவனம் செலுத்தும் வாய்ப்பு கள் அதிகமாக இருந்தன. வால்க் கர்ஸ் நிறுவனங்களில் அவர் பணியாற் றினார். எனது தந்தை அந்த நிறு வனத்திற்கு பெரும் உதவிகளைச் செய்தார்.

நான் கண்டுபிடிப்புகளுக்காகப் பாடசாலை மட்டத்தில் பல விருது களைப் பெற்றுக்கொண்டேன். ஆரம் பத்தில் மோட்டார் வாகனங்கள் தொடர்பான கண்டுபிடிப்புகளிலேயே அதிக ஆர்வம் காட்டினேன். பாட சாலை மட்டத்தில் பெற்ற விருதுகள் எனக்கு பெரும் ஆர்வத்தை ஏற்படுத் தின. பின்னர் இலங்கை தேசிய கண்டு பிடிப்பாளர்களுக்கான சம் மேளனத்தில் சேர்ந்தேன். இது எனது பயணத்தின் திருப்பு முனை யாக அமைந்தது. தேசிய தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தில் நடத்தப் பட்ட பயிற்சி நெறியில் சிறப்பு சித்தி பெற்றேன்.

அந்தத் தருணத்தில் தேசிய உற் பத்தியாளர் ஒருவர் குளிரூட்டி இயந் திரம் ஒன்றில் ஏற்பட்ட கோளாறு பற்றி என்னிடம் கூறினார். அவரது அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தேன். அவ்வாறாக எனது தொழிலைத் தொடர்ந்தேன்.

*கேள்வி:-* நீங்கள் பல விருது களைப் பெற்றுள்ளீர்கள். அவற்றைப் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* நாட்டிற்கு ஒருவர் செய்த பணிக்காக வழங்கப்படும் விருது. ஓர் ஆண்டில் பத்துப்பேருக்கு வழங் கப்படுகிறது. இது ஒருவரின் வாழ்க் கையில் ஒரு முறையே வழங்கப்படும். இந்த விருது எனக்கு 2000ஆம் ஆண்டில் தொழில்நுட்பக் கண்டு பிடிப்புகளுக்காக வழங்கப்பட்டது. கைத்தொழிலாளர்கள் சம்மேளனத் தில் கைத்தொழில் கண்டுபிடிப்புகளுக் கான மூன்றாவது பரிசு கிடைத்தது.



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழிலதிபர் ரொஷான் குணதிலக்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 25ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற் றம் பற்றி விளக்கினார் தொழில் அதிபர் ரொஷான் குணதிலக்க.

புனித பெனடிக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற ரொஷான் குணதிலக்க, சிறுவயதி லேயே இலத்திரனியல் துறையில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

தேநீர் தயாரித்துத்தர சகோதரி மறுத்ததால் மனமொடிந்து போயிருந்தவர் பின்னர் தேநீர் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றைத் தயாரித்தார்.

அவரது கண்டுபிடிப்புகளுக்காகப் பல விருது கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு பொறி யயல் துறையில் நோபல் பரிசு பெற்றுக்கொடுப்பதே தனது குறிக்கோள் என்றார் "சோர் குரூப்" கூட்டு நிறுவனங்களின் அதிபர் ரொஷான் குணதிலக்க.

ரீ.என்.எல். தொலைக்காட்சி யில் தொழில் அதிபர் ரொஷான் குணதிலகக்கவை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்ரமவும், 113 கம் பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேச மான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண் டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

இலங்கைப் பொறியியலாளர்கள் சங்கம் வழங்கும் சிறந்த இலத்திர னியல் கண்டுபிடிப்பிற்காக விருது கிடைத்தது. இது என்னைப் பொறுத்த வரையில் மிக முக்கியமானது எனக் கருதுகிறேன்.

*கேள்வி:-* நீங்கள் இளம் வயதில் தேநீர் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை உற்பத்தி செய்தீர்கள் என்று அறி கிறோம். அது பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* உயர்தர வகுப்பில் கல்வி கற்றபோது, மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக சில பரிசோதனைகளைச் செய்துவந்தேன்.

அப்போது ஒருநாள் தேநீர் தயா ரித்துத் தருமாறு எனது சகோதரி யைக் கேட்டேன். அவர் மறுத்துவிட் டார். அதன் காரணமாகவே தேநீர் தயாரிக்கும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் எண்ணம் எனக்கு வந்தது. அவ்விதமே தேநீர் இயந்திரத்தை உருவாக்கினேன். அதன் பின்பு ஏழு பேருக்கு தேநீர் தயாரிக்கும் இயந்தி ரத்தை உருவாக்கிக் கொடுத்திருக் கிறேன்.

*கேள்வி:-* இத்தகைய கண்டு பிடிப்பை ஜப்பான் அல்லது மேற்குலக நாடொன்றில் தயாரித்திருந்தால் தயா ரித்தவருக்குப் பல வாய்ப்புகள் ஏற் படுத்தப்பட்டிருக்கும். இங்கு நிலைமை எவ்வாறு இருந்தது?.

*பதில்:-* திறமையுள்ள பல இளை ஞர்கள் இலங்கையில் உள்ளனர். அவர்களின் திறமைகளை அரசாங்கம் இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். காரணம் ஆரம்பத்தில் எமது திறமைகளை வெளிக்கொணர் வது மிகவும் கஷ்டமாக இருக்கும். அத்துடன், கைத்தொழில் வளர்ச்சிக் கான தேசியக் கொள்கை ஒன்று தேவைப்படுகிறது. அதன்மூலம் நாட்டை எவ்வளவோ தூரம் முன் னேற்றமுடியும்.

*கேள்வி:-* உங்களுக்குச் சொந்த மான பல நிறுவனங்கள் இருக்கின் றன. இவற்றிற்கான மூலதனத்தைத் திரட்டுவதில் எவ்வாறான பிரச்சினை களைச் சந்தித்தீர்கள்?

*பதில்:-* நான் இதில் பெரும் கஷ் டத்தை எதிர்நோக்கினேன். அனைத்து கைத்தொழிலாளர்களின் நன்மை கருதி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், வட்டி மிகவும் உயர்வாக இருக்கிறது. இது மறு பரிசீலனை செய்யப்பட வேண்டிய விடயம். ஆனால், செலான் வங்கி கைத்தொழிலாளர்கள் மீது காட்டப் படும் அக்கறை பாராட்டத்தக்கது. இதனை எனது அனுபவத்தின்மூலம் கூறுகின்றேன்.

*கேள்வி:-* நீங்கள் . ஏற்றுமதித் துறையில் ஈடுபடப் போகிறீர்கள் என்று அறிகிறோம் வரி முறையில் எத்தகைய மாற்றத்தை எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:-* 9சதவீத வட்டிவீதம் வர வேற்கத்தக்கது. நாம் வெளிநாட்டு வரு மானத்தைப் பெற்றுத்தருகிறோம். அதற்காக எமக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

*கேள்வி:-* உங்களது எதிர்காலத் திட்டங்கள் என்ன?

*பதில்:-* இலங்கையில் பொறியி யல்துறையை சர்வதேசத்துறைக்கு உயர்த்த வேண்டும். அதற்கான நோபல் பரிசை இலங்கை பெற வேண்டும்.

அத்துடன், முக்கியமான விட யத்தையும் கூறிவைக்க விரும்புகி றேன். சரியானதொரு கைத்தொழில் கொள்கையின் கீழ் வழிநடத்தப்பட் டால் இன்னும் சில ஆண்டுகளில் நாடு கைத்தொழிலில் சிறந்து விளங் கும்.

- இவ்வாறு கூறினார் ரொஷான் குணதிலக்க. (ம)

---

# பக்தர்களின் பாவங்களை அபகரிக்கும் ஈஸ்வரன்

சூரியன் சிதம்பரத்தில் மட்டும் தானா உதிக்கின்றான்? இல்லவே இல்லை. எம் நாட்டிலும்தான் உதிக் கின்றான். அதேபோலத்தான் சிதம் பரத்தில் மட்டும்தானா ஈஸ்வரன் நர்த்தனமாடுகிறார்? என்றால் இல் லவே இல்லை. எமது ஊரிலுள்ள சிவன் ஆலயங்களிலெல்லாம் ஈஸ் வரன் நர்த்தனமாடிக் கொண்டுதான் இருக்கிறான். சூரிய, சந்திரர் எல்லா இடங்களிலும் உதயமாகி ஒளி தரு வதுபோலவே சந்தியா காலத்தில் - பிரதோஷ காலத்தில் - ஈஸ்வரன் எல்லா இடங்களிலும் நர்த்தனமாடு கிறார். அவர் ஆடும்போது உள்நிறைந்த ஆனந்தத்தோடு ஆடுவதால் அதற்கு ஆனந்தத்தாண்டவம் என்று பெயர். ஆடுகின்ற அந்தப் பதத்துக்கு குஞ் சித சரணம் என்று பெயர்.

உள்ளம் கவர் கள்வன் என்று ஈஸ்வரனை ஞானசம்பந்தர் அழைத் தார். ஈஸ்வரன் எதை அபகரித்துப் போகிறார்? தனது பக்தர்களுடைய கஷ்டம், துக்கம், பாவம் எல்லாவற் றையும் தானே அபகரித்துச் செல் கிறார். பக்தி முற்றிய நிலையிலுள்ள அடியவர்களுடைய பக்தி உள்ளத் தைக்கூட அபகரித்துச் செல்கின்றார்.

ஆக்கியோன்:
**நயினை விஜயன்**

எமது தேகத்தில் மூன்று சரீரங் கள் உண்டென்பது ஞானிகள் செப் பிய உண்மை. நரம்பு, தசைகள், இரத் தம் ஆகியவற்றால் ஆக்கப்பட்டுள்ள சரீரம் ஸ்தூல சரீரம். உள்ளே இருக் கும் மனம் சூக்கும சரீரம். நாம் எம்மை மறந்து தூங்கும் போது அனுபவித்து ஆனந்தம் அடையும் சரீரமே காரண சரீரம்.

எனவே, இந்த மூன்று சரீரங்க ளையும் விடுத்து எல்லாத் துன்ப துயரங்களையும் அகற்றி ஆனந்த மயமான ஈஸ்வரனுடன் ஒன்றுபட்டி ருக்கவே நாம் ஆலயத்துக்குச் செல் கின்றோம்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஒரு ஆலயத்துக்குச் செல்லும்போது அந்த

**ஞானக் கதிர்**

ஆலயத்திலுள்ள ஆண்டவனைப் பாடு வது கிடையாது. முன்னராக அந்த ஊரில் எழும் வேதபாராயணங்களின் ஒலி, ஓம குண்டங்களின் புகையின் தன்மை, பெருமை, தானதர்மங்களின் வகைகள், பெருமைகள் இவற்றைப் பற்றியே பாடுவார்கள்.

இதிலிருந்து ஆலய சுற்றாடலை நாம் எவ்வளவு சிரத்தையாக வைத் திருக்கவேண்டும் என்பது புலப்படு கிறது. அவ்வாறுள்ள நல்ல சுற்றாட லில் உள்ள ஆலயத்தில் மட்டுமே ஆண்டவன் உறைவான்.

சந்தியாகாலத்தில் ஈஸ்வரன் ஆனந்த நடனம் செய்கின்ற வேளை யிலேயே நாம் சிவனைத் தியானம் செய்தல் வேண்டும். தேவையற்ற ஆடம்பரங்களை ஒதுக்கி பிரயோசன மில்லாத பொழுதுபோக்குகளை விடுத்து இல்லங்களையும், சூழல் களையும் தூய்மைப் படுத்தி பக்தி பூர்வமாக குடும்பத்தாரோடு சிவனை வழிபடுவதே அடியவர்கள் கடமை யாகும்.

---



யாழ்.வண்ணை நீராவியடி, சைவ பரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற புண்ணிய நாச் சியம்மையார் தின குருபூசை விழாவின்போது நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருளாசி நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.



காரைநகர் சிவன்கோயிலில் அண்மையில் நடைபெற்ற மணிவா சகர் விழாவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற பண்ணிசை மாண விகள் பண்ணிசை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (ஒ-78)

---

## கொழும்பில் அடுத்த மாதம் கம்பன் விழா

யாழ்ப்பாணம்,மார்ச்28

கொழும்பு கம்பன் கழகம் நடத் தும் கம்பன் விழா அடுத்த மாதம் 16ஆம் திகதிமுதல் நான்கு தினங் கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

வழமைபோல இவ்வாண்டும் முன் னாள் தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஔவை நடராஜன் உள்ளிட்ட தமிழக அறி ஞர்களும் ஈழத்து அறிஞர்கள் பலரும இவ்விழாவில் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை, மாலை என இருவேளைகளிலும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

ஊர்வலம், பட்டிமன்றம், கவிய ரங்கம், கருத்தரங்கம், வழக்காடு மன் றம், இளைஞர் அரங்கம், சுழலும் சொற்போர், அறிஞர் கௌரவிப்பு ஆகியன சிறப்பு நிகழ்வுகளாக நடை பெறும். (எ-8)

## மானிப்பாயில் சட்டவிரோத மணல் அகழ்வு

சண்டிலிப்பாய்,மார்ச்28

மானிப்பாய் மேற்குப் பகுதியில் கடந்த சில தினங்களாக தனியார் காணிகளில் அவற்றின் உரிமையா ளர்களின் அனுமதி இன்றி சட்டவிரோ திகளால் மணல் அகழப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி காணி உரிமையாளர் கள், அப்பகுதி கிராம அலுவலர் மற் றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆகியோருக்கு முறையிட்டுள்ளனர். மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனமும் இது பற்றி கடிதம்மூலம் முறைப்பாடு செய்துள்ளது. (ஒ-135)

# யாழ்.மாநகர சபையின் நிலத்தில் முகாம் அமைப்பதைத் தடுக்கவும்!

## பிரதமருக்கு மனிதநேய ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.மாநகரசபையின் பழைய கட்டடச் சூழலில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்ற நோக்கில் தங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்த நிலையில் தங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக யாழ் மாநகரசபை அலுவலகம் இயங்கிய காணியில் பாரிய இராணுவ முகாம் ஒன்றினை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது எமக்கு மிகுந்த மனவருத்தத்தைத் தருகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சோதனை சாவடிகள், படை முகாம்கள் என்பவற்றை தளர்த்தி பொதுமக்களின் காணிகள் கையளிக்க வேண்டிய இந்த வேளையில் மேலும் காணிகளை சுவீகரித்து படைமுகாம் அமைக்கும் பாதுகாப்பு அமைச்சின் இந்த நடவடிக்கையானது பொதுமக்கள் மத்தியில் மட்டுமன்றி சமாதான முயற்சிகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தப் படைமுகாம் அமைக்கப்பட்டுவரும் நிலப்பரப்பின் சமீபமாக இரண்டு தேசிய பாடசாலைகள், மெதடிஸ் தேவாலயம், முனியப்பர் இந்து ஆலயம், பொதுநூலகம், சிறுவர் பூங்கா, துரையப்பா விளையாட்டரங்கு, திறந்த வெளியரங்கு மற்றும் புதிய நீதிமன்ற வளாகம் ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த மையங்கள் அமைந்திருக்கின்றன.

எனவே, இந்த இராணுவமுகாம் அமைக்கப்பட்டால் அது பொதுமக்களின் நடமாட்டத்தை வெகுவாகப் பாதிக்கும்.

எனவே, இந்த விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு காலந் தாழ்த்தாது இதனைத் தடுத்து நிறுத்துவதுடன் இது விடயம் தொடர்பாக பொது அமைப்புகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சர், நோர்வே தூதுவர், கண்காணிப்புக் குழு தலைமைக் காரியாலயம், மனித உரிமைகள் ஆணைக்குழு தலைமையகம், வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், விடுதலைப் புலிகளின் தலைவர், யாழ் அரசஅதிபர், யாழ்.மாநகர ஆணையாளர், பாலாலி படைத்தலைமையகம் ஆகிய தரப்பினர்களுக்கும் சேர்ப்பிக்கப்பட்டன.

(ஒ-4)



**யாழ்.மாநகர சபை முன்னர் இயங்கிய இடத்தில் தற்போது முகாம் அமைக்கப்படுவதை தடுக்குமாறு கோரும் மகஜரை யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று கையளித்தனர்.**

**மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகளான சு.பரமநாதன், சி.வி.கே.சிவஞானம், த.பஞ்சலிங்கம், சி.தவரட்ணம், கஜேந்திரன், அருட்தந்தை பேர்னாட் அடிகளார், ப.சுப்பிரமணியம், ஜெயசேகரம் ஆகியோர் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதித் தலைவர் லேனாட் கிளாக்ஸிடம் மகஜரைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.**

*(படம் அற்புதன்)*

## கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால்

# கிளிநொச்சியில் 57 பாடசாலைகள் சேதம்: புனரமைப்பதற்கு 500 கோடி ரூபா தேவை!

## வலயக் கல்விப் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 57 பாடசாலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவற்றினைப் புனரமைப்பதற்கு 500 கோடி ரூபா தேவைப்படுகின்றது. இத்தகவல்களை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 94 பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பூநகரியில் இரண்டு பாடசாலைகளும் பளையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கிளாலி, முகமாலை பகுதியில் இரண்டு பாடசாலைகளுடன் மேலும் பல பாடசாலைகள் இயங்காமல் இருக்கின்றன.

மக்கள் தற்போது மீளக்குடியேறி வருகின்றமையினால் பாடசாலைகளை சொந்த இடங்களில் இயங்கவைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் ஆசிரியர் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாகத் தோன்றும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

இயங்கி வரும் 94 பாடசாலைகளுக்கும் ஆயிரத்து 500 நிரந்தர ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், தற்போது 700 ஆசிரியர்கள் மட்டுமே கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

பளைக் கோட்டத்தில் இயங்குகின்ற 13 பாடசாலைகளுக்கு 138 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 72 ஆசிரியர்களே கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

போர் காரணமாக எமது மக்கள் இழந்த சொத்துக்களினை மீட்டுக் கொண்டு வருவது என்பது பிரச்சினையான விடயம்.

இந்த மட்டத்தில் பெரும்பாலான பெற்றோர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர். ஆனாலும் அவர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கவே விரும்புகின்றனர். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

# வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கு வெளியே உள்ள தமிழருக்கு தனி அலகு

## மலையக முன்னணி வலியுறுத்து

வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்நாட்டில் தனித்துவத்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு 15 லட்சம் மலையகத் தமிழ் மக்களை முதன்மைப்படுத்தி அவர்களுக்கென ஓர் அதிகார பரவலாக்கல் அலகு மலையகத்தில் உருவாக்கப்படவேண்டும். இதனை ஜேர்மனியில் நடக்கும் சமஷ்டி தொடர்பான மாநாட்டில மலையக முன்னணி சார்பாக வலியுறுத்துவோம் என ஜேர்மன் செல்லுவதற்கு முன்னர் முன்னணியின் உபதலைவர் அ.லோறன்ஸ் தொடர்பு சாதனங்களுக்குத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

1994ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு மலையக மக்கள் முன்னணி, மலையக தமிழ் மக்களுக்கு இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி போன்ற ஓர் அதிகாரப்பரவலாக்கல் அலகு உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய கருத்தை மேலும் தொடர்ச்சியாக வலியுறுத்துவோம்.

இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வில் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதோ அதேபோன்று மலையகத் தமிழ் மக்களது பிரச்சினைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

சமஷ்டி முறையிலோ அல்லது பிரதேச அடிப்படையிலான எந்த இனப்பிரச்சினைத் தீர்விலும் மலையகத் தமிழ் மக்களது பிரச்சினைகளும் கட்டாயம் உள்ளீட்கப்பட வேண்டும்.

- என்று அவர் கூறினார். (ஒ)

# இலங்கை வீராங்கனைகள் லண்டனில் தலைமறைவு!

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணித் தலைவி உட்பட மூன்று வீராங்கனைகள் லண்டன் விமான நிலையத்தில் தலைமறைவாகியுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுலாவை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னா நாடு திரும்பும் வழியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அணித்தலைவி சுதர்ஷினி சிவநாதன், ரமணி பெரேரா, ஹிரோஷி அபேசிங்க ஆகியோரே தலைமறைவான வீராங்கனைகளாவர்.

மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து செவ்வாயன்று லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை இலங்கை வீராங்கனைகள் வந்தடைந்தனர். அங்கிருந்து இலங்கைக்கு வரும் விமானம் சுமார் 2மணித்தியாலம் தாமதமாகியுள்ளது.

விமானத்தில் ஏறுவதற்கு 15நிமிடங்களுக்கு முன்பாகவே வீராங்கனைகளிடம் கடவுச் சீட்டுக்கள் ஒப்படைக்கப்பட்டன.

அதன் பின் சில நிமிடங்களில் இம்மூன்று வீராங்கனைகளும் மறைந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

# விளையாடாது விட்டாலும் ஷேன் வோர்னுக்குப் பரிசு

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் ஆஸ்திரேலியா அணி பெற்ற பரிசுப்பணத்தில் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னுக்கு 15,000 ஆஸ்திரேலிய டோலர்கள் (சுமார் 9லட்சம் ரூபா) வரையான தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து உட்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் காரணமாக ஒரு போட்டியிலும் பங்குபற்றாமல் அணியிலிருந்து நீக்கப்பட்டார் ஷேன் வோர்ன்.

எனினும், உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணியுடன் தங்கியிருந்த நாள்களின் அடிப்படையில் ஷேன் வோர்னுக்குப் பரிசுப்பணம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

உலகக்கிண்ணப் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி மொத்தமாக சுமார் 21.5 கோடி ரூபாவை பரிசாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(ஒ-5)

# உலகக் கிண்ணப் போட்டியில் கிரிக்கெட் ரசிகர்களின் சாதனை

ஜொஹான்னஸ்பர்க் வாண்டரர்ஸ் அரங்கில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியை 32,827 பேர் நேரில் பார்வையிட்டனர்.

தென்னாபிரிக்காவின் கிரிக்கெட் வரலாற்றில் இது ஒரு சாதனையாகும்.

- இவ்வாறு உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஏற்பாட்டுக்குழு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

"தென்னாபிரிக்காவில் இதற்கு முன ஆகக் கூடுதலான ரசிகர்கள் நேரில் பார்வையிட்ட போட்டி பெப்ரவரி 16 ஆம் திகதி நடைபெற்றது.

இதே வாண்டரர்ஸ் அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து அணிகள் மோதின. இப்போட்டியை 31,500 பேர் பார்வையிட்டனர்.

ஆரம்ப வைபவம் மற்றும் 52 போட்டிகளையும் மொத்தமாக 6,26,845 பேர் நேரில் பார்வையிட்டுள்ளனர்.

(ஒ-5)

# இறுதியாட்டத்தில் றோயல் - சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம்,மார்ச்28

கொழும்பு றோயல் கல்லூரியினால ஏற்பாடு செய்யப்பட்ட சமாதானக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டம் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விறுதியாட்டத்தில் கொழும்பு றோயல் கல்லூரியும், யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன.

(ஒ-5)


உ

நவற்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

திருவிழா விவரம்

28.03.2003 - காலை 10.00 மணிக்கு கொடியேற்றம்
02.04.2003 - மாலை வசந்தோற்ஷவம்
04.04.2003 - மாலை வேட்டைத் திருவிழா
05.04.2003 - மாலை சப்பரத் திருவிழா
06.04.2003 - காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழா
07.04.2003 - காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்ஷவம்
08.04.2003 - மாலை பூங்காவனத் திருவிழா

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(C-27030)



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திராந்திகள் [illegible] விற்பனை

இடம்: மரக்காலை,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்
காலம்: 07.04.2003 திங்கட்கிழமை காலை 11.00 மணி
விபரம்: தொகுதி இல.I
1) இறக்குமதி செய்யப்பட்ட மரங்கள் (லொம்பஸ்)
2) மலை வேம்பு பலகைகள்
3) விசேட தர திராந்திகள்
தொகுதி இல.II
1) விசேட (மேல்) தர திராந்திகள்
2) முதல் தர திராந்திகள்
3) விசேட தர திராந்திகள
தொகுதி இல.III
1) விசேட தர திராந்திகள்
குறித்த பொருள்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
மேலதிக விவரங்களுக்கு என்னுடன் தொடர்புகொள்ளவும்.
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்,
பருத்தித்துறை வீதி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.222-2349
- பிராந்திய முகாமையாளர்.
(C-27026)

# நீதிமன்றுக்கு வரும்வரை மகன் ஈ.பி.டி.பி. முகாமில் இருக்கவில்லை

## மிருசுவில் கொலை வழக்கில் சாட்சி தெரிவிப்பு

"2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இந்த வழக்கு சம்பந்தமாக இந்த நீதிமன்றத்திற்கு வரும் வரை எனது மகன் ஈ.பி.டி.பி. முகாமில்தான் தங்கியிருந்தார் என்பது தவறு; அதிகமான நாள்கள் அவர் வீட்டில்தான் இருந்தார்."

மிருசுவில் படுகொலைகள் வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது - தொடர்ந்து சாட்சியமளித்துவரும் கந்தையா பொன்னுத்துரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தின விசாரணையின் போது சாட்சியை அரச தரப்பு சிரேஷ்ட சட்டவாதி சரத் ஜயமான குறுக்கு விசாரணை செய்தார்.

*கேள்வி:-* உங்கள் மகனைச் சந்தித்த பின் அவரை உங்கள் சைக்கிளில் ஏற்றிச் சென்றதாகக் கூறினீர்கள் அல்லவா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* உங்களிடம் மகன் என்ன சொன்னார்?

*பதில்:-* இராணுவத்தினர் தங்களைப் பிடித்து வைத்திருந்தார்கள் என்றும், தான் தப்பி ஓடிவந்ததாகவும் கூறினார்.

*கேள்வி:-* எந்த இடத்திலிருந்து ஓடி வந்ததாகக் கூறினார்?

*பதில்:-* பாம் தோட்டத்திலிருந்து வந்ததாகக் கூறினார்.

*கேள்வி:-* இறந்து போனவர்களில் ஞானச்சந்திரன் என்பவர் உங்களுக்கு என்ன உறவு?

*பதில்:-* எனது மனைவியின் தங்கையின் மகன்.

*கேள்வி:-* சம்பவம் நடந்த இடங்கள், நேரம், திகதி ஆகியவற்றை புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறீர்களா?

*பதில்:-* இல்லை.

*கேள்வி:-* இவை யாவற்றையும் உங்கள் ஞாபகத்தின் மூலம்தான் சொல்கிறீர்கள். அப்படித்தானே?

*பதில்:-* ஆம்.

இதனையடுத்து வில்வராசா செல்வராணி என்பவர் சாட்சியமளித்தார். இவரை அரச சட்டவாதி சரத் ஜயமான குறுக்கு விசாரணை செய்தார்.

*கேள்வி:-* நீங்கள் கல்யாணம் முடித்திருக்கிறீர்களா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* கணவரின் பெயர் என்ன?

*பதில்:-* வில்வராசா.

*கேள்வி:-* உங்கள் ஊர் எது?

*பதில்:-* மிருசுவில்.

*கேள்வி:-* எவ்வளவு காலமாக மிருசுவிலில் வாழ்கிறீர்கள்?

*பதில்:-* பிறந்த நாள் முதல்.

*கேள்வி:-* பாடசாலைக்குச் சென்றிருக்கிறீர்களா?

*பதில்:-* ஆம் ஒன்பதாவது வகுப்பு வரை படித்திருக்கிறேன்.

*கேள்வி:-* உங்கள் கணவரின் பெயர் சின்னையா வில்வராசா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?

*பதில்:-* 6 பிள்ளைகள்.

*கேள்வி:-* தங்கள் கணவர் வில்வராசா, மகன்கள் பிரசாத், சாந்தன் ஆகியோர் இந்தச் சம்பவத்தில் இறந்து போனவர்கள் அல்லவா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* கணவனை இழந்த விதவையாகவும், மகன்களை இழந்த தாயாகவும்தான் இன்று இந்த நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளீர்கள்?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* தங்கள் கணவரையும் மகன்களையும் கடைசியாக எப்போது பார்த்தீர்கள்?

*பதில்:-* 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி.

*கேள்வி:-* பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவரைத் தெரியுமா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* மிருசுவிலில் பொன்னுத்துரை மகேஸ்வரனுக்கு வீடு இருக்கிறதா?

*பதில்:-* ஆம். எமது வீட்டுக்கு முன்னால்தான் அவரது வீடு.

*கேள்வி:-* சம்பவம் நடந்த அன்று எத்தனை பேர் பாம் தோட்டத்திற்குச் சென்றார்கள்?

*பதில்:-* தெய்வகுலசிங்கம், ரவிவர்மன், சாந்தன், ஞானச்சந்திரன், மகேஸ்வரன், பிரசாந், ஜெயசந்திரன், வில்வராசா ஆகியோர்.

*கேள்வி:-* டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி மகேஸ்வரன் எந்த நிலையில் வீட்டுக்கு வந்தார்?

*பதில்:-* மிகவும் பயந்த நிலையில் 'அன்ரி', 'அன்ரி' என்று அழைத்தவாறு ஓடி வந்தார்.

*கேள்வி:-* நீங்கள் மகேஸ்வரனிடம் என்ன கேட்டீர்கள்?

*பதில்:-* உமது சித்தப்பா, பிள்ளைகள் மற்றும் உம்முடன் வந்தவர்கள் எங்கே என்று கேட்டேன்?

*கேள்வி:-* அதற்கு அவர் என்ன பதில் சொன்னார்?

பதில்:- இராணுவம் பிடித்து வைதத்திருப்பதாகக் கூறினார் - விசாரணை தொடர்கிறது. (ஒ)

# தமிழ்க்கைதி மீதான வழக்கு முதலாம் திகதிக்கு ஒத்திவைப்பு

அரச தரப்பினரால் சான்றுப் பொருள்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காத காரணத்தால் வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார். இது வெலிக்கடை நீதிமன்றில் இடம்பெற்ற சம்பவம்.

வவுனியா நெலுக்குளத்தைச் சேர்ந்த நடேசன் செல்வராசா (வயது 46) என்பவர் சி-4 ரக குண்டு ஒன்றைத் தமது உடைமையில் வைத்திருந்தார் என இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி, பொலீஸ் அத்தியட்சகருக்கு அளித்த வாக்குமூலத்தை அரச சான்று பொருள்களாக ஏற்கமுடியாதென நீதிபதி ஏற்கனவே தீர்ப்பளித்திருந்தார்.

வெலிக்கடை விசேட நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையின் போது அரச தரப்பில் கல்கிசை பிரதான பொலீஸ் பரிசோதகர் நிலப்தீன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்.

அரச தரப்பு சான்றுப் பொருள்களான வெடி மருந்து பொருத்தப்பட்ட 'கசற்' ரேடியோ நீதிமன்றத்துக்குக் கொண்டுவரவில்லை என அரச சட்டவாதி எம்.நவாவி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அரச பகுப்பாய்வுப் பரிசோதகர், நீதிபதியின் உத்தரவின்றி சான்றுப் பொருள்களைத் தம்மால் தரமுடியாதெனத் தெரிவித்ததாகவும் அரச சட்டவாதி தெரிவித்தார்.

இதனையடுத்து சான்றுப்பொருள்களை வழங்குமாறு பகுப்பாய்வுப் பரிசோதகருக்கு அறிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கு விசாரணையை எதிர்வரும் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

1998ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட எதிரி கடந்த நாலரை வருடங்களாகத் தடுதது வைக்கப்பட்டுள்ளார் என்றும் - வழக்கை ஒத்திப் போடுவதாக இருந்தால் எதிரிக்குப் பிணை வழங்குமாறும் - எதிர்த்தரப்பு சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

இது குறித்து அரச சட்டவாதியிடம் நீதிபதி வினவியபோது, தாம் தமது உயரதிகாரிகளோடு கலந்து பேசி அடுத்த தவணையில் அது பற்றித் தெரிவிப்பதாகக் கூறினார்.

அரச தரப்பில் அரச சட்டவாதி எம்.நவாவியும் எதிர்த்தரப்பில் என்.ஸ்ரீகாந்தாவும் ஆஜரானார்கள். (ஒ)

# விவசாய தேசிய மாநாட்டில் தமிழ்மொழி புறக்கணிப்பா?

காரைதீவு,மார்ச்28

விவசாயக் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்பி.திஸாநாயக்க கலந்துகொண்ட தேசிய விவசாய வேலைத்திட்ட மாநாட்டில் தமிழ் மொழியைக் கிஞ்சித்தும் காணவில்லையென வடக்கு - கிழக்கிலிருந்து சென்ற தமிழ் மொழிமூல அலுவலர்கள் குறை கூறினர்.

பிரஸ்தாப மாநாடு கடந்த திங்கட்கிழமையன்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நாட்டிலுள்ள உதவி விவசாயப் பணிப்பாளர்கள் தொடக்கம் விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்கள் என சுமார் 4ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். இவர்களுள் தமிழ் மொழிமூல அலுவலர்களும் இருந்தனர்.

இவ்வேலைத்திட்ட மாநாட்டிற்கு வருமாறு அனுப்பப்பட்ட கடிதம் தொடக்கம் அமைச்சால் வழங்கப்பட்ட நாளாந்தப் பதிவேடு, வேலைக்கிரம பதிவு அனைத்தும் தனிச்சிங்களத்தில் இருந்தன.

மாநாட்டில் அனைத்து பேச்சுகளும், ஒலி பரப்புகளும் தனிச்சிங்களத்திலேயே இருந்தன. தமிழ் மொழி பெயர்ப்பு இடம்பெறாததினால் தமிழ்மொழிமூல அலுவலர்கள் பெருத்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது.

சிங்களத்துடன் தமிழும் அரச கரும மொழிதானா? என்றே சிந்திக்கவேண்டியுள்ளதென அவர்கள் ஆதங்கப்படுகின்றனர். (ஒ)

# பரிசாரகர் பயிற்சிக்கு தெரிவானோர் விவரம்

தென்மராட்சி,மார்ச்28

யாழ். பிராந்திய சுகாதார திணைக்கள நிறுவனங்களில் பணியாற்றும் 41 சிற்றூழியர்கள் பரிசாரகர் பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 31 ஆம் திகதி தொடக்கம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படுமென யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் ஊழியர்களை பயிற்சி நெறியில் கலந்துகொள்வதற்கு விடுவிக்குமாறும் அவர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

நயினாதீவு சுற்றுயல்கூறு வைத்தியசாலையிலிருந்து, திருமதி கு. வைகுந்தநாயகி, ஐ.மார்க்கண்டு, தி. லோகேஸ்வரன், க.சகாதேவன், செல்வி க.கிஸ்னோஸ்வரி, திருமதி கு.வசந்தகுமாரி ஆகியோரும் நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையிலிருந்து பாரட்னேஸ்வரி, வே.லோகேஸ்வரன், வஜான்மேரி, ப.தனலட்சுமி, ப.செபமாலை, செ.நகுலராசா, க. பாலச்சந்திரன், அ.சகாயராசா, சி. யோமளம் -

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையிலிருந்து பி.தியாகலிங்கம், சி.ஜெயகிரிதரன், க.அன்பழகன் ஆகியோரும் அனலைதீவு சுற்றயல் கூறிலிருந்து க.சிவஞானவதி, வேலணை கிராம வைத்தியசாலையிலிருந்து ந.இராசகுமாரி, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்து எஸ்.குலேந்திரன்-

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து ஐ.திருச்சந்திரன், சி.ஓங்காரவடிவேல், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையிலிருந்து கு.எட்வேட், இ.கெளரிரத்தினம், தெ.பரமேஸ்வரி, சி.ஜெகநாதன், சி.நாக லிங்கம் -

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் இருந்து எஸ்.செல்வநாதன், யோ.ரவிச்சந்திரிக்கா, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையைச் சேர்ந்த தகிலைசதாஸன், வி.கைலாசநாதன், கோப்பாய் சுற்றுயல்கூறு வைத்தியசாலையிலிருந்து நா.நவீந்திரன் -

அச்சுவேலி சுற்றுயல்கூறு வைத்தியசாலையிலிருந்து ந.செல்வராசா, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த அ. குணராசா, வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையைச் சேர்ந்த மு.பரமானந்தகுமார், மந்திகை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த ஆ. ஜெகதீஸ்வரன் -

கோண்டாவில் மத்திய மருந்தகத்தைச் சேர்ந்த சு.நகுலேஸ்வரி, இளவாலை மத்திய மருந்தகத்தைச் சேர்ந்த நா.எதிர்முகசிங்கம், அம்பன் மத்திய மருந்தகத்தைச் சேர்ந்த ஐ. ஜெயக்குமார், மார்பு நோய் சிகிச்சை நிலையத்திலிருந்து ம.ஜெகநாதன் ஆகியோரும் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-17)



இலங்கைக் கலைக்கழகத் தமிழ் இலக்கியக் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் வன்னி பிரதேச இலக்கியக் கருத்தரங்கு அண்மையில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி செ.யோகராசா கருத்தரங்கை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2531393 இருந்து
2549557 வரை
சீட்டிழுப்பு இல. 1387
திகதி 26.03.2003

வெற்றி எண்கள் 02 05 11 14 51

போனஸ் எண் 15

ஜக்பொட் பரிசு ரூபா.2,356,500/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,356,500/- | 2,356,500/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 111 | 10,000/- | 1,110,000/- |
| 3 | 5,683 | 500/- | 2,841,500/- |
| 2 | 95,761 | 20/- | 1,915,220/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து). | 117,227 | 10/- | 1,172,270/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,595,490/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா.1,500,000/-

தொடர் இல. 3527304க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 29ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
54, சுந்தரப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2537843-6-85
2534181-6-60
2535829-8-76
2535412-7-95
2538030-1-15

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி ஸ்ரீதரன் குவலயா

(தரம் 9 மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி)

அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியிருக்கும் எமது கழகப் பத்திராதிபர் திரு.இரா.ஸ்ரீதரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன், செல்வி குவலயாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

துயருறும்:
ஆட்சிக்குழு உறுப்பினர்களும், கழக ஆசிரியர்களும்,
பாலர் கல்விக் கழகம்.

(16039)


உலகெங்கும் உள்ள உங்கள் உறவினர்களுடன் தொடர்புகொள்ள


**INTERNET**
Browsing Centre



ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. : 021-222 2670, 222 3588 FAX : 222 3214
E-MAIL : del-smskr@eureka.lk
(சி-27024)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(28.03.2003)




## செல்வி தயா மார்க்கண்டர்

(தட்டெழுத்தாளர், பிரதேச செயலகம், சங்கானை)

தோற்றம்: 24.03.1963 மறைவு: 17.03.2002

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அ.மார்க்கண்டர் J.P.
(தந்தை)
வட்டுக்கோட்டை.

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(16036)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண் மகிழ | | கண் கலங்க |
|---|---|---|
| 14 |  | 01 |
| - | | - |
| 11 | | 04 |
| - | | - |
| 1961 | | 2000 |

## அமரர் சங்கரப்பிள்ளை பாலசிங்கம்

(பாலன்)
திதி: 28.03.2003

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
எம்மை விட்டு நீர் பிரிந்து ஆண்டுகள்
மூன்றான போதும் நீங்கள் எங்களுக்காக
காட்டிய ஆதரவினை இனி யாரிடம் பெறுவோம்
நெஞ்சின் எண்ணத்தில் எந்நாளும் நீங்கள்
நினைவிருந்து எமக்கு வழிகாட்டியாக
வாழ வைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு
வாழ்ந்து வருகின்றோம்!

*என்றும் உங்கள் நினைவோடு வாழும்:*
அன்புத் தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள், மாமன்மார்,
மாமிமார், மைத்துனர்மார், மைத்துனிமார்,
மருமக்கள்மார், பெறாமக்கள்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*கைதடி கிழக்கு,*
*கைதடி.*

(C27025)

# பண்ணிசை, பேச்சு போட்டிகள்

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையில் நடத்தப்படும் போட்டிகளில் யாழ்மாணவர்களுக்கான பண்ணிசை, பேச்சுப் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும் என இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அறிவித்துள்ளார். (எ)

# ஆசிரியர் கலாசாலை சான்றிதழ் வழங்கல்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 2002 இறுதிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2மணிமுதல் 3மணிவரை கலாசாலையில் வைத்து வழங்கப்படும் என்றும் -

உரியவர்கள் நேரில் வருகைதந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம் என கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (எ)


**G.A.Q, B.A PART I, II**
யாழ். பேராதனை

**தமிழ்: க.தர்மராஜா**
ஆரம்பம்: 29.03.2003, சனி: 8.00 A.M
சனி, ஞாயிறு தினங்களில்
வகுப்புகள் நடைபெறும்.
நியூட்டன்
ஆரியகுளம் சந்தி,
யாழ்.நகர்
(16042)

## ஒப்பறேற்றர் தேவை

அச்சுவேலியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தியேட்டருக்கு ஒப்பறேற்றர் (Operator) தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும்.

தொடர்பு: லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
T.P. : 070-212223
(16037)


# ஜப்பானிய அதிகாரி யாழ்.விஜயம்

ஜப்பானிய சர்வ்தேச ஒத்துழைப்பு நிறுவனத் தலைவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். கடந்த கால இராணுவ நடவடிக்கையின்போது கைதடி நுணாவில் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணியைப் பார்வையிட்டார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி அரச வைத்தியசாலை உட்பட பல கட்டடங்களையும் அவர் பார்வையிட்டார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் விஜயம்செய்து அதன் பணிகள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (ஒ-31)


## வெளிவந்துவிட்டது!

# ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு

(சங்க காலம் தொடக்கம் 19ஆம் நூற்றாண்டு வரை)
க.பொ.த.உயர்தர, G.A.Q., B.A. வகுப்பு
மாணவர்களுக்குரியது.

**தி.மதிவதனன்** B.A. Dip. in Ed.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2573
(16038)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 27 |  | 03 |
| - | | - |
| 08 | | 04 |
| - | | - |
| 1934 | | 2001 |

## அமரர் மாதவர் சிவசுப்பிரமணியம்

(மேற்பார்வையாளர், சிங்கர் கொம்பனி)
திதி: 28.03.2003

எங்கள் அருங்குல விளக்கே!
எமதன்பின் ஜீவிதமே!
எந்தப் பிறப்பெடுத்தாலும் உங்கள்
நினைவகன்றிடுமோ?
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
உங்கள் அன்பு நினைவுகள் ஒருபோதும்
எம்நெஞ்சைவிட்டு அகலவே அகலாது.

*"சிவா வாசா"*
*சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.*
*தொலைபேசி இல.: 222 5509*

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்.

(16040)


# மாபெரும் மலிவு விற்பனை

# த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து புடைவை வகைகளும்
19.03.2003 தொடக்கம் 29.03.2003 வரையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பாபர பிரின் 60" | - 50.00 | |
| சித்தை இந்தியன் | - ~~50.00~~ | 40.00 |
| சீத்தை சையினா | - ~~75.00~~ | 55.00 |
| பப்பிளின் | - ~~60.00~~ | 50.00 |
| பிரின் | - ~~110.00~~ | 90.00 |
| சேட்டிங் செக் L/C | - ~~130.00~~ | 110.00 |
| சேட்டிங் செக் D/C | - ~~140.00~~ | 120.00 |
| கேட்டின் லேஸ் 60" | - ~~130.00~~ | 110.00 |
| சலஞ்சர் பிளேன் 36" | - ~~80.00~~ | 70.00 |
| சலஞ்சர் பிளேன் 44" | - ~~90.00~~ | 80.00 |

| | | |
|---|---|---|
| சேட் - பெட்டி | - ~~530.00~~ | 350.00 |
| | ~~725.00~~ ~~700.00~~ ~~695.00~~ 650.00 | 500.00 |
| T.சேட் பெரிது | ~~525.00~~ | 400.00 |
| T.சேட் சிறிது | ~~345.00~~ | 250.00 |
| T.சேட் சிறிது | ~~425.00~~ | 300.00 |
| பிளவுஸ் வகைகள் | ~~350.00~~ | 275.00 |
| பிளவுஸ் வகைகள் | ~~450.00~~ | 350.00 |
| இன்ரகூலர் பிளேன் | ~~130.00~~ | 100.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சாரி வகைகள் | ~~525.00~~ | 390.00 | ~~350.00~~ | 250.00 | ~~430.00~~ | 300.00 |
| ஸ்கேட் அன் பிளவுஸ் | ~~1250.00~~ | 1000.00 | ~~850.00~~ | 500.00 | | |
| பேபி சூட் வகைகள் | ~~300.00~~ | 275.00 | ~~450.00~~ | 350.00 | ~~425.00~~ | 300.00 |
| சூட்டிங் (லெந்) | ~~225.00~~ | 140.00 | ~~400.00~~ | 300.00 | ~~430.00~~ | 350.00 |

மேலும் பலவகையான புடைவை வகைகளும் இதே மாதிரியான மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்:
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2985


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18.12.1952 உதிர்வு 23.03.1998

## அமரர் கனகரத்தினம் பாலசுந்தரராஜா

*(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் B.Sc.)*
*திதி: 28.03.2003*

இல்லத்தின் விளக்கொளியாய்
பண்பிற்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பங்குகொண்ட பாலா நீ பிரிந்து
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது எம் துயரம்
என்றும் உங்கள் நினைவுடன்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*இவரின் 5ஆம் ஆண்டுத் திவசம் மன்னாரில் அனுட்டிக்கப்படும்.*

துன்னாலை வடக்கு. பாஞ்சாலி (மனைவி)

(C27027)

வடமாகாண ஆசிரியர் சங்கச் சகாயநிதி
வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் :- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
காலம் :- 30.03.2003 ஞாயிறு 9.30மணி
அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தலைவர். (16050) செயலர்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
நுண்கலை மன்றம் 'அழகெழல்' போட்டி 2003
பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும்

காலம் : நாளை (29.03.2003) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
தலைவர் : அ.ஜெயதீபன்
வாழ்த்துரைஞர் : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் (பீடாதிபதி-யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
பிரதம விருந்தினர் : திரு. பி.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர் : தொழில் அதிபர் நா.தெய்வேந்திரம் (நெல்லியடி)
தொழில் அதிபர் கே.வி.கிருஸ்ணபிள்ளை (உடுப்பிட்டி)

(ஓவியப் போட்டியின் படைப்புகள் கண்காட்சிக்கு வைக்கப்படும்.)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நுண்கலை மன்றம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
விளம்பர அன்பளிப்பு:
(16057) சிவகணேசன் புடைவையகம், யாழ்ப்பாணம்.



நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

காணி அன்பளிப்புச் செய்த
எமது பழைய மாணாக்கர் லண்டன் வாழ்
திரு.கே.ரி.கோணேஸ் அவர்கள்

நம் பள்ளி என்றும் மேம்படவே
நம் முதல்வர் கோரிக்கை தனைஏற்று
ஒன்பதரைப் பரப்பு காணிதனை
ஒழுங்காக எங்களுக்குக் கையளித்த
கோணேசன் தனை என்றும் உளத்திருத்தி
கோடி நன்றி செலுத்துகின்றோம் வாழி! வாழி!!
- உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயச் சமூகம். (16048)


## ரவைகளுடன் கைதான இளைஞன்

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம நோக்கி வந்த இளைஞர் ஒருவரிடம் ஐந்து வெற்று ரவைகள் மீட்கப்பட்டதாகக் கொடிகாமம் பொலஸார் தெரிவித்தனர்.

முகமாலைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இந்த இளைஞன் சாவகச்சேரி நீதிவான் ஸ்.அரியநாயகம் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-3)


தேவை
தையல் வேலை தெரிந்த ஆண்கள் தேவை.
குமார் தையல் அகம்
T.P. : 0777-111486
K.K.S. றோட்,
தாவடி, கொக்குவில். (16053)



ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.30, 6.30, இரவு 9.30



நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
மாயி
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணி
HOLLOW MAN



நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா, வினுச்சக்கரவர்த்தி, கபாலி நடித்த
சொக்கத்தங்கம்
31ஆம் திகதி முதல் வசீகரா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)


### மட்டக்களப்பில்

# புலிகள் பகுதியில் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய அனுமதி

மட்டக்களப்பு,மார்ச்28

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் அவர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று வவுணதீவில் இடம்பெற்ற சந்திப்பின்போது இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முஸ்லிம்களின் காணிகளை அடையாளம் காட்டுவதற்கு காணி உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் விடுதலைப புலிகளின் கட்டுப்பாட்டுப பகுதிகளில் முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எதுவும் ஆராயப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தலைமையிலும் முஸ்லிம்கள் தரப்பில் பிரதி அமைச்சர் பஸீசேகுதாவுத் தலைமையிலான பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

இதேவேளை -

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களின் காணிகளை முஸ்லிம்கள் சுவீகரித்துக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் குறித்து அரசாங்க அதிபர்கள் தலைமையில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவும் இக்கலந்துரையாடலில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-12)

## சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,மார்ச்28

புங்கங்குளம், வில்லைபடி, ஸ்ரீநாக பூசணி அம்பாள் ஆலய வருடாந்த அபிஷேக உற்சவம் கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இறுதி நாளாகிய நாளை சனிக்கிழமை அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும்.

(ஐ)

## கைவிடப்பட்ட சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம்,மார்ச்29

வாடிக்கையாளர் ஒருவரால் சைக்கிள் ஒன்று மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் -

அவர் கைவிட்டுச்சென்ற சைக்கிள் தமது பொறுப்பில் உள்ளதாகவும் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

உரியவரை தொடர்புகொண்டு சைக்கிளை மாற்றி பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

(ஐ)


யாழ்.மாநகரசபை
கேள்வி அறிவித்தல்
இழுபொறியியந்திரமும், இழுவைப் பெட்டியும் நாளாந்த வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்வி கோரல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் குப்பை கூளங்களை அகற்றுவதற்குத் தேவையான இழுபொறி இயந்திரமும், இழுவைப் பெட்டியும் நாளாந்த வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விக் கூறுகள் கோரப்படுகின்றன. இதுதொடர்பான விண்ணப்பங்களை தாங்களே தயாரித்து யாழ்.மாநகர ஆணையாளர் அவர்களுக்கு 02.04.2003 ஆம் திகதியன்று கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
யாழ்.மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
27.03.2003 (C-27031)



எக்ஸ்போ ஏவியேஷன்
இல. 1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 3891
071 348888, 071 349999, 0777 730666

| காலைநேர விமானசேவை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள். செவ்வாய். புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |
| மாலைநேர விமானசேவை | | | | |
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி. சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு :- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
★★ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து
யாழ - பலாலி - யாழ்
இரத்மலானை - கொட்டாஞ்சேனை - இரத்மலானை
★★ வெளிநாட்டு பிரஜைகளுக்கும், உள்நாட்டு பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.
ஒருவழி - 2,425/-
இருவழி - 4,550/-
(சி-27033)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிங்கரத்தினம்

சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிங்கரத்தினம் நேற்று (27.03.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அசலாம்பிகையின் அன்புக் கணவரும் ஸ்ரீரங்கநாதன், இராமநாதன், இரகுநாதன், இரத்தினாம்பிகை, கமலவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாராசா (தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.), பன்னீர்செல்வம், யோகேஸ்வரி, கிருஸ்ணராணி ஆகியோரின் மாமியும் தாட்சாயினி, கோபிகன், விஷாயினி, சுஜிபன், பிருந்தன், டனேஸ்கரன், கிரிஷாந், டர்சிகன், பானுமதி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2003) வெள்ளிக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சிறுப்பிட்டி மேற்கு இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.* (16056)
தகவல்:
சி.இராமநாதன் (மகன்).

### நடேசு தங்கவேலாயுதம்

வளளாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆரியகுளத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு தங்கவேலாயுதம் நேற்றுமுன்தினம் (26.03.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2003) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல11, 2 ஆம் ஒழுங்கை,*
*பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (16049)
தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தர் சுப்பிரமணியம் (கார் மணியண்ணை)

(வறுத்தலைவிளான்)

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முன்னர் அறிவிக்கப்பட்டது போல் அன்றி தவிர்க்கமுடியாத காரணத்தினால் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்று(28.03.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (16051)
தகவல்:
கேதாரகௌரி அம்மா (மனைவி),
சேவையர் சின்னத்துரை (மருமகன்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



*மலர்வு : 05.08.1927*
*உதிர்வு : 27.02.2003*
*கந்தஉடையார் வீதி,*
*பருத்தித்துறை.*

கோப்பாய் வடக்கு
*அமரர்*
மகாலிங்கம் (செல்லையா)
நாகம்மா
(ஓய்வுபெற்ற உதவி மேற்பார்வையாளர் - சிறு கைத்தொழில் திணைக்களம்)

நாளை (29.03.2003) சனிக்கிழமை கந்தஉடையார் வீதி, பருத்தித்துறையில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பூசையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண, மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

| பிள்ளைகள்: | மருமக்கள்: | பேரப்பிள்ளைகள்: |
|---|---|---|
| விஜயகுமாரன், | பாலச்சந்திரன் | டினோவா, |
| ஜெயகுமாரன், | (பாலா), | நசிந், |
| வசந்தகுமாரன், | வதனராணி, | கனாதீசன், |
| வர்ணகுமாரன், | நேசராணி. | சாயீசன். |
| செல்வகலா. | | |

(16052)

கடந்த பொதுத் தேர்தலின்போது மட்டு. மாவட்டத்தில் இடம்பெற்ற

# வாக்களிப்பை ரத்துச்செய்யக் கோரும் மனுவை விசாரணைசெய்ய 'அப்பீல்' நீதிமன்றம் முடிவு

கடந்த பொதுத் தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற வாக்களிப்பு முடிவுகளை ரத்துச் செய்யுமாறு கோரும் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வது என்று மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

முன்னாள் எம்.பியான அலி சாகிர மௌலானா தாக்கல் செய்திருந்த மனுவை நேற்று ஆராய்ந்தபோதே மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு தீர்மானித்தது. கடந்த தேர்தலிலும் அலி சாகிர் மௌலானா போட்டியிட்டிருந்தார்.

மனு மீதான விசாரணை எதிர்வரும் ஜுன் 19 ஆம் திகதி நடைபெறும் எனவும், அன்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக அப்போது கடமையாற்றிய எஸ்.சண்முகத்தின் சாட்சியத்தைப் பதிவுசெய்வதெனவும் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் பாதைகள் படையினரால் மூடப்பட்டிருந்ததால் அப்பிரதேசங்களைச் சேர்ந்த 65,000 வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டிருந்தார். (ஐ)

# கொழும்பு - கிராண்ட்பாஸ் மோதலில் 6 பொதுமக்கள், 3 பொலீஸார் காயம்

கொழும்பு,மார்ச்28

ஒருகொடவத்த பகுதியில் பொலீஸ், பொதுமக்கள் மோதலில் மூன்று பொலீஸாரும் ஆறு பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கம்கருபுர பகுதியில் வீடொன்றில் பதின்மூன்று வயது சிறுமியொருத்தி கைகள் கட்டப்பட்ட நிலையில் அடைத்து வைத்துப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என்று புகார் தெரிவிக்கப் பட்டது. இது தொடர்பாகப் பொலீஸார் வேண்டிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கருதப்பட்டதாலேயே முறுகல நிலை ஏற்பட்டு மோதல் வெடித்தது என்று கூறப்படுகிறது.

ஆத்திரமடைந்த பொதுமக்கள் வீட்டுக்கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கே தாம் கண்ட பொருள்களிலிருந்து அந்த வீட்டில், ஒன்றில் விபசாரம் நடந்திருக்க வேண்டும் அல்லது ஆபாசப் படங்கள் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க வேண்டியிருப்பதாகக் கூறினர். பொலீஸாரும் இதற்கு உடந்தையாக இருந்திருக்க வேண்டும் என்று முடிவுகட்டினர்.

அதை அடுத்து நூற்றுக்கணக்கானோர் கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தைச் சுற்றிவளைத்தனர். பொலீஸ் நிலையம் கற்களாலும் போத்தல்களாலும் தாக்கப்பட்டது என்றும் - வீதிகளை மறித்து டயர்கள எரிக்கப்பட்டன என்றும் - பொலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

கூட்டத்தைக் கலைக்கப் பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகளையும் தீர்த்தனர். துப்பாக்கிகளைப் பொதுமக்களில் சிலர் பறிக்க முனைந்தபோதே இரு தரப்பினருக்குமிடையே மோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

6 பொதுமக்களும் 3 பொலீஸாரும் படுகாயமடைந்தனர்.

பொலீஸார், பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலில் ஈடுபட்டனர் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இச்சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கெனப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே மற்றும் பிராந்தியப் பொலீஸ் உயர் அதிகாரிகள் தலைமையிலான மாநாடு கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தில் நேற்றிரவு இடம்பெற்றது.

குறிப்பிட்ட வீட்டிலிருந்து மீட்கப்பட்ட சிறுமிக்கு வைத்தியசாலையில சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

(ஐ)

# பெண்கள் எழுச்சி மாநாடு மட்டக்களப்பில் ஆரம்பம்

கொக்கட்டிச்சோலை,மார்ச்28

வடக்கு-கிழக்கு பெண்கள் எழுச்சி மாநாடு, நேற்று மட்டக்களப்பில் மிகவும் உணர்ச்சி பூர்வமாக ஆரம்பமானது.

காலை 9 மணியளவில் மட்டு. செபஸ்தியார் ஆலய முன்றிலில் ஆரம்பமான ஊர்வலம் கல்லடி இசை நடனக் கல்லூரியைச் சென்றடைந்தது.

புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் பானுகா தலைமையில நிகழ்வுகள் நடைபெற்றன. பொதுச் சுடரினை தமிழீழப் பெண்கள் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் இராணுவப் பொறுப்பாளர் திலாயினி ஏற்றிவைத்தார்.

புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட துணை அரசியல்துறைத் பொறுப்பாளர் கிருசன், அன்னை பூபதிக்கு மலர் மாலை அணிவித்தார். நேற்று ஆரம்பமான இந்த மாநாடு நாளை சனிக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறும். (ஐ)

## தமிழ்ச்செல்வன் இன்று வருகிறார்

கிளிநொச்சி,மார்ச்28

ஜப்பானில் நடைபெற்ற ஆறாம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றச் சென்ற விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவினர் இன்று கிளிநொச்சி திரும்புகின்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு.-அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா ஆகியோர் இன்று அதிகாலை கொழும்புக்கு வருவர். பின்னர் அங்கிருந்து ஹெலி மூலம் கிளிநொச்சியை வந்தடைவர்.(ஐ-3)

## முகாம் அமைப்பதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் மற்றும் திணைக்களங்கள் இயங்கிய கட்டடம் கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் தரைமட்ட மாக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அந்தக் கட்டடம் அமைந்துள்ள பகுதியில் தளம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கை மாநகரசபைக் கட்டடத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கு தடையாக உள்ளது. இதனைக் காரணங்காட்டி தளம் அமைப்பதை இடைநிறுத்தும் இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றை பெறும் நோக்கில் நீதிமன்றத்தில் மனுத தாக்கல் செய்யப் பொதுஅமைப்புகள முஸ்தீபு செய்து வருகின்றன.

மனுத்தாக்கல் செய்வதற்கு முன்னோடியாக பொதுஅமைப்புகளின பிரதிநிதிகள், சட்ட ஆலோசனைகளை பெற்று வருவதாக அந்த அமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.(ஐ-3-8)

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் முதலாம் தவணை விடுமுறைகள் ஆரம்பமாகும்.

பரீட்சை நிலையங்களாகச் செயற்படாத பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக மே மாதம் 05 ஆம் திகதியும், பரீட்சை நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் மே மாதம் 21 ஆம் திகதியும் ஆரம்பமாகும். (ஐ)

## முகாம் அமைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை கயிறு மூலம் தற்காலிக வேலி அமைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் பொதுமக்களைப் பிரவேசிக்க வேண்டாம் என்று கோரும் எச்சரிக்கைப் பலகையும் அங்கு நடப்பட்டுள்ளது.

'இது ஓர் அரச இராணுவச் சொத்து. இதன் உள்ளே நுழையும் எவரும் குறைந்தளவு தண்டனையை அனுபவிக்க நேரிடும் - என்று ஆங்கிலத்தில் அந்தப் பலகையில் எழுதப்பட்டுள்ளது. புல்டோசர் கொண்டு துப்புரவு செய்யப்பட்டு பட்டப்படுத்தப்பட்ட மாநகர சபைக் கட்டட வளாகத்திலேயே இந்த அறிவுறுத்தல் பலகை நாட்டப்பட்டுள்ளது.

(ஐ-3-3-9)

## மூன்று நிபந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தேடப்பட்டு வந்த முதலாவது எதிரியான நெப்போலியன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார்.

நெப்போலியனுக்கு பிணை வழங்கும்படி வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

ஆனால், கொழும்பிலோ, வவுனியாவிலோ பிணை அனுமதி பெற்றமைக்கான சான்றுகள் எவையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால் யாழ்நீதிமன்றத்தில் பிணை செலுத்த வேண்டும என்று நீதிவான் தெரிவித்தார்.

தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணை வழங்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும். அத்துடன் இந்த வழக்கின் சாட்சிகளுக்கு எவ்வித அச்சுறுத்தலையும் விடுக்கக்கூடாது என்று நீதிவான தனது உரையில் தெரிவித்தார்.

யாழ்.நீதிமன்றில் ஆஜராவது தனக்கு அச்சுறுத்தலானது என்று கருதுவதால், கொழும்பு நீதிமன்றத்தில நெப்போலியன் சரணடைய விரும்புவதாக அவர் சார்பில் கொழும்பு உயர் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம்மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு உயர் நீதிமன்றம், அதனை வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தியது. அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வவுனியா மேல் நீதிமன்றம் நெப்போலியனைப் பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவை நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றத்துக்கு வழங்கியிருந்தது. (ஐ-8)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் -

பக்தாத் நோக்கி முன்னேறி வந்து கொண்டிருக்கும் கூட்டணிப் படைகளுக்கான விநியோகங்களை துண்டிக்கும் நோக்குடன் ஈராக்கின் விசேட படைகள் பெரும் ஊடறுப்புத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.

அல் - சமாவா என்ற நகரில் ஈராக்கியப் படைகள் ஊடறுத்து நடத்திய தாக்குதலை அடுத்து அங்கு நேற்று இருதரப்புகளுக்குமிடையே கடுஞ் சண்டை மூண்டது. (முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

## நிமலராஜன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு நீதிவான் உத்தரவிட்டு விசாரணையை அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கூட்டமைப்பு வேட்பாளர்கள் தாக்கப்பட்ட வழக்கில் வவுனியா மேல்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நெப்போலியனுக்கு யாழ்நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி வழங்கியது. காலை 10 மணியளவில் நீதிமன்றப் பிணை அனுமதி கிடைத்ததும் நெப்போலியன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறிச் சென்றார்.

அதன் பின் நேற்றுமாலை நிமலராஜன் படுகொலை வழக்கு விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றது. அந்த விசாரணையின்போது நெப்போலியனை கைது செய்யும் உத்தரவை யாழ்.நீதிமன்றம் விடுத்தது.

(ஐ-3-8)


LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு:

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்.

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/27007)



மாபெரும் உயிரியல் கருத்தரங்கு

A/L 2003

பரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் வினாக்களை உள்ளடக்கியதாக நடைபெறும் இறுதிக் கருத்தரங்கு.

* பல்தேர்வு வினாக்கள்
* அமைப்புக் கட்டுரை வினாக்கள்
* கட்டுரை வினாக்கள்

ஆரம்பம்: 31.03.2003 திங்கள் 9 a.m.

By : நாகநாதன்

தவறவிட்டால் தவிக்க நேரிடும்.

NEW SCIENCE CENTRE

(16033) யாழ்நகர்.



மரண அறிவித்தல்

முருகன் சண்முகம்

விஸ்வகுல வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சண்முகம் அவர்கள் நேற்று (27.03.2003) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகம்மாவின் (ருக்குமணி) அன்புக் கணவரும் வல்லிபுரம், கந்தசாமி (டென்மார்க்), பத்மலோசனா, சந்திரலோனா, சாந்தகுமாரி, சத்தியபாமா (ஜேர்மனி), நந்தினி, சிவகுமார் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகேஸ்வரி (இராசு), லதா (டென்மார்க்), மனோகரன் (கொழும்பு), இராசன் (கொழும்பு), கந்தசாமி, சசி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வல்லிபுரம்
(மகன்)

(சி-27034)



இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்

பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி அவர்கள்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் சகலப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9 மணிமுதல் மாலை 7 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (15691)



MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச் சந்தி அருகே, மேல்மாடியில்)

கொழும்பு பல்கலைக்கழகத்தின்

வெளிவாரிப் பட்டப்படிப்பு

-தகவல் தொழில்நுட்ப இளமாணி-

BIT புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும் MCS அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

தெரிவுப் பரீட்சைக்குரிய வழிகாட்டல் வகுப்புக்கள், 2ம் அரையாண்டிற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.



BIT

SSW


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.